பக்கங்கள்:-பத்து

Registered as a News paper in Sri Lanka

விலை ரூபா. 6.00

உலகெங்குமுள்ள உங்கள் உறவினர்களுடன்
INTER NET மூலம்
குறைந்த கட்டணத்தில் தொடர்புகொள்ள
இலங்கை முழுவதும் 24 மணிநேரத்தில் துரித தபால்/பொதிகள் சேவை
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
303, K.K.S. ROAD, JAFFNA
T.P : 021-2222670, 2223588
FAX: 2223214
Email-del-smskr@eureka.lk

வலம்புரி
The Valampuri

சங்கு 04 | வள்ளுவர் ஆண்டு 2034 | ஆடி 11 | ஞாயிற்றுக்கிழமை | (27.07.2003) | தொலைபேசி - 2223378 | ஒலி 220

# வடக்குக் கிழக்கு இடைக்கால சபைக்கு ஸ்ரீ.மு.காங்கிரஸும் திட்டவரைபு தயாரித்தது

## ஜனாதிபதியுடன் ஆலோசிக்கப்படுமாம்

(கொழும்பு)

**வடக்கு - கிழக்கு மாகாணத்திற்கு அமைக்கப்படவுள்ள இடைக்கால நிர்வாகசபை சம்பந்தமாகத் தாம் தயாரித்துள்ள யோசனைகள் தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுடன் பேச்சுவார்த்தை நடத்தப்போவதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அறிவித்துள்ளது.**

அமைக்கப்படவிருக்கும் இடைக்கால நிர்வாக சபையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் நிலை, பங்களிப்பு என்பன எத்தகையதாக இருக்கவேண்டும் என்பது தொடர்பாக முஸ்லிம் காங்கிரஸ் யோசனை ஒன்றைத் தயாரித்துள்ளது.

அந்த யோசனைகள் தொடர்பாகவே முஸ்லிம் காங்கிரஸ் ஜனாதிபதி சந்திரிகாவுடன் பேசத் தீர்மானிததுள்ளது. இதுவிடயம் தொடர்பாக முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் நாயகம் என்.ரி.ஹஸன் அலி அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில்,எதிர்வரும் காலங்களில் இனப்பிரச்சினை தொடர்பாக ஜனாதிபதியும் பிரதமரும் இணைந்து தீர்வுகளைக் காண முன்வர

(10ம் பக்கம் பார்க்க)

## பயிற்சியை நிறைவு செய்த இளநிலை அதிகாரிகள் பிரபாவால் கௌரவிப்பு

(கிளிநொச்சி)

இளநிலை அதிகாரிகள் பயிற்சியை முடித்துக் கொண்டு வெளியேறிய ஒரு தொகுதி போராளிகளுக்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் பரிசில்களையும் சான்றிதழ்களையும் வழங்கிக் கௌரவித்தார்.

வன்னியில் உள்ள தமிழீழ விடுதலைப புலிகளின் பாசறை ஒன்றில் நேற்று முன்தினம் இடம் பெற்ற இந் நகழ்வில் கட[illegible]புலிகளின சிறப்புத் தளபதி கேணல் [illegible]சை,வட முனைக் கட்டளைத் தளப[illegible] கேணல் தீபன், மூத்த தளபதிகள[illegible]ன கேணல் பானு, கேணல சொர்ண[illegible],தமிழீழ அரசியல் துறைப் பொறுப்[illegible]ளர் சு.ப.தமிழ்ச் செல்வன்,கேணல் விதுஷா,கேணல் துர்க்கா மற்றும் துறைசார்ந்த பொறுப்பாளர்கள்,போராளிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

(10ம் பக்கம் பார்க்க)




## ஸ்ரீ.சு.கட்சி- ஜே.வி.பி கூட்டு வெகுதொலைவில் இல்லை

### ஜே.வி.பி பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும், ஜே.வி.பியும் இணைந்து புதிய கூட்டணி ஒன்றை அமைக்கும் காலம் வெகு தொலைவில் இல்லை என ஜே.வி.பியின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும், ஜே.வி.பியும் கூட்டணி அமைப்பதில் தடையாக இருந்து வந்த விடயங்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது. இதனால், இருதரப்பினரும் கூட்டு உடன்படிக்கையில் விரைவில் கையொப்பமிடவுள்ளனர்.

உடன்படிக்கையில் கைச்சாத்திடுவது பறறி ஆராயும் ஆலோசனைக் கூட்டம் இன்று ஜனாதிபதி மாளிகையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் நல்லதொரு முடிவு எடுக்கப்படுமென நம்பிக்கை கொணடுள்ளோம். இவ்வாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார். (தி)

## திருமலையில் ஹர்த்தால்

(திருகோணமலை)

திருகோணமலையில் நேற்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. ஹர்த்தாலினால் நகரின் வழமையான செயற்பாடுகள் அனைத்தும் முற்றாக ஸ்தம்பித்தது.

திருகோணமலையில் படையினர் அடிக்கடி மேற்கொள்ளும் சுற்றிவளைப்புக்கள் தமிழ் மக்களின் காணிகள் அபகரிக்கப்படுகின்றமை மற்றும் விடுதலைப் புலிகளின் குரங்குப்பாஞ்சான் முகாமை அகற்றுமாறு கோரியமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.(இ-3)

## யாழ். பல்கலைக்கழக பேரவை கூடியபோது சித்தமருத்துவ மாணவர்கள் கதவுகளைப் பூட்டினர்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக் கழக சித்த மருததுவத்துறை மாணவர்கள், தமது கோரிக்கைக்கு சாதகமான பதில் தருமாறு கோரி, பல்கலைக் கழகப் பேரவை நேற்றுக் கூடியபோது, பேரவைக் கேட்போர் கூடத்தில் உறுப்பினர்கள் இருந்த சமயம், மண்டபத்தின் நுழைவாயில்களைப் பூட்டிப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்று யாழ். பல்கலைக் கழகத்தில் இடம்பெற்ற சித்தமருத்துவத் துறை மாணவர்களின் இப் போராட்டத்தினால் பல்கலைக் கழக நிர்வாகப் பணிகள் 5மணித்தியாலங்கள் வரை ஸ்தம்பித்தது.

பல்கலைக் கழக பேரவைக் கேட்போர் கூடத்தில் நேற்றுக் காலை 9.00 மணியளவில் ஆரம்பமான பேரவைக் கூட்டததில் 15 உறுப்பினர்கள கலந்து

(10ம் பக்கம் பார்க்க)

# இடைக்கால சபைத் திட்டத்தை பொ.ஐ.முன்னணி நிராகரித்தது!

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கு அனுப்புவதற்காக அரசாங்கத்தினால் தயாரிக்கப்பட்ட இடைக்கால நிர்வாகம் தொடர்பான திட்டத்தை பொ.ஐ.மு. நிராகரித்துள்ளது. அரசியல் தீர்வொன்றுக்கான தயாரிப்புக்கள் இல்லாத நிலையில் இந் நடவடிக்கை உரிய காலம் வரமுன்னர் எடுக்கப்படுவதாகவும் அது கூறியுள்ளது.

இடைக்கால நிர்வாகம் ஒன்றை முதலிலேயே ஏற்பாடு செய்வது குதிரைக்கு முன்பாக வண்டியைப் பூட்டுவது போன்றது என்று இதனை ஆராய்வதற்கென நியமிக்கப்பட்டுள்ள குழுவின் தலைவர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்தார்.

இறுதித் தீர்வொன்று பொதிந்து வைக்கப்பட்ட நிலையில், அதனை அமுல் செய்வதற்கு புதிய அரசியல் சட்டமொன்றும் அங்கீகரிக்கப்பட வேண்டிய ஒரு சூழலில் மட்டுமே இத்தகைய ஒரு இடைக்கால நிர்வாகம் நியாயப்படுத்தப்படலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

எதிர்க்கட்சியினர் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் பேசிய கதிர்காமர் பிரேரிக்கப்பட்டுள்ள இடைக்கால சபையின் எதிர்க்கட்சியின பிரதி

(10ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மாகாணசபைத் தேர்தலுக்கு தயாராகுமாறு ஜனாதிபதி பணிப்பு


(கொழும்பு)

மாகாண சபைத் தேர்தல்களை நடத்தி வாக்காளர்களின் போக்கை அறிய விரும்புவதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா அண்மையில் நடத்திய உரையாடல்களின் போது பொ.ஐ.மு.ஆதரவாளர்களிடம் தெரிவித்துள்ளார்.இவ்வாண்டின் இறுதியில் மாகாண சபைத் தேர்தல்களை நடத்தி மக்களின் ஆதரவு பொ.ஐ.மு.பக்கம் இருக்கிறதா?ஐ.தே.மு.பக்கம் இருக்கிறதா? என்பதை பரீட்சிப்பதற்கு இது வாய்ப்பான நேரம் என்று ஜனாதிபதி தனது கட்சியின் மத்திய குழு உறுப்பினர்கள், தேர்தல் தொகுதி அமைபபாளர்கள் மத்தியில் பேசுகையில் குறிப்பிட்டார்.

பொ.ஐ.மு.இன் கட்டுப்பாட்டில் இயங்கும ஆறு மாகாண சபைகளுக்கும் தேர்தலை நடத்துவதா,அல்லது பொ.ஐ.முன்னணிக்கும் அமோக ஆதரவு கிடைக்கக் கூடிய தென் மாகாண சபை,வட மேல் மாகாண சபை ஆகிய இரண்டுக்கும் மட்டும் தேர்தல்களை நடத்துவதா என்பது பற்றி அவர்கள ஆராய்ந்தனர்.

2004-ம் ஆண்டுடன் பதவிக் காலம் முடிவடையும் மேல் மாகாணம்,தென்மாகாணம்,வட மத்திய மாகாணம், ஊவா,சப்பிரகமுவா,வட மேல் மாகாணங்கள் தமது பதவிக் காலம் முடிவடைவதற்கு முன்னரே தேர்தலைகளைச் சந்திக்க முடியும். 1994-ம் ஆண்டு தென் மாகாண சபையை வெற்றி கொண்டதன் மூலமே மக்கள் தீர்ப்பைத் திசைப் படுத்த முடிந்ததென்று கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.


அமைப்பாளர்கள் வீடுவீடாகச் சென்று பிரசாரங்களை ஆரம்பித்து தேர்தல் ஒன்றை எதிர்கொள்வதற்கு தயாராக வேண்டும் என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா கேட்டுக் கொண்டார். (த)













வடக்குக் கிழக்கு மாகாண தமிழ் மொழித் தினவிழா நேற்று யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்ற போது பிரமுகர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும், கலாநிதி எஸ்.சிவலிங்கராஜா,கல்வி அமைச்சின் செயலாளர் தியாகலிங்கம்,கல்விக் கழகத் துணைப் பொறுப்பாளர் அருண்மாஸ்டர் ஆகியோர் உரையாற்றுவதையும், மாணவர்கள் பரிசு பெறுவதையும, சபையோரையும் படங்களில் காணலாம்.(படங்கள்:ஜெராட்.)

# கைதான புலி உறுப்பினர்கள் இருவரும் பிணையில் விடுதலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வாழைச்சேனையில் நேற்று முன்தினமிரவு பொலிசாரால் கைது செய்யப்பட்ட விடுதலைப் புலி உறுப்பினர்கள் இருவரும் நேற்று மட்டக்களப்பு நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டு பிணையில் விடுதலை செய்யப்பட்டனர்.

புலி உறுப்பினர்கள் இருவரும் பயணம் செய்த வாகனம்,செங்கலடிப் பொலிஸ் சோதனைச் சாவடியில் மறிக்கப்பட்டு சோதனையிடப்பட்டதுடன், வாகனத்திற்குரிய ஆவணங்களும் பொலிஸாரால் கோரப்பட்டது.

ஆனால் வாகனத்திற்குரிய ஆவணங்கள் எதுவும் சமர்ப்பிக்கப்படவில்லை அத்துடன் வாகனத்தின் இலக்கமும் போலியானது என குற்றம் சாட்டப்பட்டு அவர்கள் இருவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.வாகனமும் தடுத்து வைக்கப்பட்டது.

நேற்று மட்டக்களப்பு நீதி மன்றில் ஆஜர் செய்யப்பட்ட அவர்கள் இருவரும் பிணையில் விடுதலை செய்யப்பட்டனர்.

சதாசிவம் அமிர்தலிங்கம்(வயது 18)கிருஷ்ணபிள்ளை மதியழகன் (வயது 28) ஆகிய இருவரும்மே பிணையில் விடுதலை செய்யப்பட்டவர்களாவர். (த-14)

## உதைபந்தாட்ட போட்டி

(சுண்டுக்குளி)

புங்குடுதீவு பாரதி சன சமூக நிலையத்தின் ஏற்பாட்டில் மாவீரர்களான மேஜர் சிட்டு, ஊரப்பன், அப்பன், ஈஸவரன், குட்டித்தம்பி, அழகுநிலா ஆகியோரின் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்திற்கான விலகல் முறையிலான மாபெரும் உதைபந்தாட்ட போட்டி எதிர்வரும் 1,2,3ஆம் திகதிகளில் புங்குடுதீவு முற்றவெளி மைதானத்தில் நடைபெறவுள்ளது. (உ-110)

## துரையப்பா சிரார்த்த தினம்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா சுதந்திர கட்சியின் மூத்த உறுப்பினர் அல்பிரட் துரையப்பாவின் 28 ஆவது சிரார்த்த தினம் இன்று யாழ்ப்பாணத்தில் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

சுதந்திரக் கட்சியின் யாழ்.மாவட்ட உப தலைவர் ஆர்.சௌந்தரநாயகம் தலைமையில் நிகழ்வு ஆரம்பமாகும்.காலை 10 மணியளவில் துரையப்பா ஸ்ரேடியத்தில் மலர் அஞ்சலி நிகழ்வு இடம்பெறும்

இந் நிகழ்வில் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மத்திய குழு உறுப்பினர்கள், செயற்குழு உறுப்பினர்கள தொகுதி அமைப்பாளர்கள் என பலரும் கலந்து கொளளவுள்ளனர். (இ-3)

## திட்டமிட்டபடி பரீட்சை நடக்கும்

(கொழும்பு)

தற்போது தற்காலிகமாக மூடப்பட்டிருக்கும் களனிபல்கலைக்கழகத்தின் இறுதியாண்டுப் பரீட்சைகள் யாவும் திட்டமிட்டபடி எதிர்வரும் 24 ஆம் திகதி முதல் நடைபெறும் என பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர்அறிவித்துள்ளார்.

இப்பரீட்சையை முன்னிட்டும் பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் விரிவுரையாளர்களின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. இதேவேளை பல்கலைக்கழகத்தில் குழப்பங்களை ஏற்படுத்திய 21மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கு எதிராக பல்கலைக் கழக நிர்வாகமும், பொலிசாரும், வெவ்வேறான விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளனர்.

இருமாணவக்குழுகளுக்கு இடையே ஏற்பட்ட மோதல் காரணமாக இப் பல்கலைக்கழகம் கடந்த 21ஆம் திகதி மறுஅறிவித்தல்வரை மூடப்பட்டதும் தெரிந்ததே. (தி).

## துடுப்பாட்டம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர்நொதேண் விளையாட்டுக் கழகத்தின் 25 ஆவது ஆண்டு நிறைவையொட்டி பரராஜசிங்கத்தின் ஞாபகார்த்தமாகவும் பரா வெற்றிக்கிண்ண மாபெரும் துடுப்பாட்ட சுற்றுப் போட்டியில் இன்று மு.ப.8.30மணிக்கு போத்ஸ்ரார் விளையாட்டுக் கழகம் எதிர் இருபாலை வானவில் விளையாட்டுக் கழகமும், மு.ப.9.45 மணிக்கு யமகா விளையாட்டுக்கழகம் எதிர் ஈச்சமோட்டை விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளன.

தொடர்ந்து பி.ப.2.30மணிக்கு ராஜ் விளையாட்டுக்கழகம் எதிர் கொய்யாத்தோட்டம் விளையாட்டு கழகமும் பி.ப.3.15 மணிக்கு தங்க நிலா விளையாட்டுக்கழகம் எதிர் இந்திரா விளையாட்டுக்கழகமும் மாலை 4.45மணிக்கு நொதேண் விளையாட்டுக்கழகம் எதிர் ரெண்டுல்கார் விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளன. (உ-10)

# வட-கிழக்கு மாகாண தமிழ்...

வவுனியா விபுலானந்த மகாவித்தியாலயம்.

### விவாதம்

(திறந்த போட்டி)

திருகோணமலை புனித சூசையப்பர் கல்லூரி,வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம்;அக்கரைப்பற்று முஸ்லிம் மகளிர் கல்லூரி

### தமிழறிவு

(திறந்த போட்டி)

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம், திருகோணமலை இ.கி.ச.ஸ்ரீகோணேஸ்வரா இந்துக் கல்லூரி,கல்முனை ம.்.மூத் மகளிர் கல்லூரி.

### முஸ்லிம் நிகழ்ச்சி

(திறந்த போட்டி)

எம்.எம்.பாத்திமா(றிஸ்பானா கல்முனை அஸ்-ஸிராஜ் மகா வித்தியாலயம்), அப்துல் அலீம் முகமட் மஸீ மட்டக்களப்பு அல்-ஹிரா வித்தியாலயம்,எம்.எம்.முர்சித் (திருகோணமலை அல்-அக்ஷா மகா வித்தியாலயம்).

### சிங்கள நிகழ்ச்சி

(விஷேட பிரிவு 1)

பி.ஆசிரசமரநாயக(திருகோணமலை திஸ்ஸ மகா வித்தியாலயம்), ஆர்.எம்.லக்ஷிகா ஷயாமலி(வவுனியா மூன்றுமுறிப்பு அ.சி.க. பாடசாலை),

(விஷேட பிரிவு 2)

ஏ.எம.பி.துலான் சமீர (வவுனியா திஸ்ஸ மகா வித்தியாலயம்), சோமபாலகே சுமத்பிரசன்ன(வவுனியா காமினி மகா வித்தியாலயம்).

### வீணை

(பிரிவு 2)

வினுஜா குகதாஸ்(திருகோணமலை புனித மரியாள் கல்லூரி), சி.அபயன்(யாழ்.இந்துக் கல்லூரி), ச.கிருத்திகா(வவுனியா இறம்பைக்குளம் மத்திய மகா வித்தியாலயம்)

(பிரிவு 3)

உ.சகாணா(யாழ்.உடுவில் மகளிர் கல்லூரி),பூர்ணிமா ஸ்ரீதரன் (திருகோணமலை புனித மரியாள் கல்லூரி),எ.தர்மினி(மட்டக்களப்பு வின்சன் மகளிர் உயர் தரப் பாடசாலை)

(பிரிவு 4)

தி.காயத்திரி(யாழ்.உடுவில் மகளிர் கல்லூரி),லஷிதா தேவராஜா (திருகோணமலை புனித மரியாள் கல்லூரி),பி.மினோஜி(மட்டக்களப்பு வின்சன் மகளிர் உயர் தரப்பாடசாலை)

(பிரிவு 5)

பா.கஸ்தூரி(யாழ்.சுண்டிக்குளி மகளிர் கல்லூரி),தி.சோபனா(வவுனியா இறம்பைக்குளம் மத்திய மகா வித்தியாலயம்.

### வயலின்

(பிரிவு 2)

அகுஸ்தீன் அமலறோயன் (வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம்),அ.இவாஞ்சலின் தாமிரா (மட்டக்களப்பு வின்சன் மகளிர் உயர்தர தேசிய பாடசாலை) ஜெ.கம்ஸவதி(யாழ்.மெதடிஷ்த பெண்கள் உயர்தர பாடசாலை)

(பிரிவு 3)

சே.சகிஷ்னா(மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரி),த.பிருந்தன் (திருகோணமலை இ.கி.ச. ஸ்ரீகோணேஸ வரா இந்து கல்லூரி)இ.ஜெயகிருஷ்ணன்(யாழ்.இந்துக் கல்லூரி).

(பிரிவு 4)

ச.ஜெனார்த்தனி(வவுனியா இறம்பைக்குளம் மத்திய மகா வித்தியாலயம்),ஜெ.வைஷ்ணவி(மானிப்பாய் மெமோறியல் ஆரம்பப் பாடசாலை), தே.இந்துஜா(மட்டக்களப்பு வின்சன் மகளிர் உயர்தர பாடசாலை).

(பிரிவு 5)

கிருத்திகா அருள்ஜோதி(மட்டக்களப்பு வின்சன் உயர் தர பாடசாலை),இ.அபிராமி(திருகோணமலை புனித மரியாள் கல்லூரி),க.பிரார்த்தனா(யாழ்.உடுவில் மகளிர் கல்லூரி)

### புல்லாங்குழல்

(பிரிவு 3)

விஜயருக்ஷாயினி சந்திரசேகரம் (யாழ்.சுண்டிக்குளி மகளிர் கல்லூரி)

(பிரிவு 4)

பா.ஐங்கரன்(யாழ்.ஹாட்லிக் கல்லூரி).

(பிரிவு 5)

த.தனேந்தினி(யாழ்.சுண்டிக்குளி மகளிர் கல்லூரி)

### நேற்றைய தமிழ்த் தினப் போட்டி முடிவுகள்

### விஷேட கூத்து

(வடமோடி)

மட்டக்களப்பு செங்கலடி மத்திய கல்லூரி,

### விஷேட கூத்து

(சிந்துநடை)

யா/விக்டோறியா கல்லூரி, மு/ஸ்ரீமுருகானந்தன் வித்தியாலயம்.

### நாட்டுக் கூத்து

(இசை நாடகம்)

யா/உடுவில் மகளிர் கல்லூரி, வ/விபுலானந்தா மத்திய வித்தியாலயம,கிளி/முழங்காவில் மத்திய வித்தியாலயம்.

### நாட்டுக் கூத்து

(வடமோடி)

மட்/செங்கலடி மத்திய கல்லூரி, மு/ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயம், வ/இறம்பைக்குளம் ம.ம.வித்தியாலயம்.

### நாட்டுக் கூத்து

(தென்மோடி)

யா/புனித ஹென்றியரசர் கல்லூரி,மட்/கன்னங்குடா ம.வித்தியாலயம்,கிளி/புனித பற்றிமா றோ.க.

### நாட்டுக் கூத்து

(சிந்துநடை)

யா/அருணோதயக் கல்லூரி, வ/பூந்தோட்டம் அ.த.க.பாடசாலை, மு/ஸ்ரீமுருகானந்தா வித்தியாலயம்.

### மாவட்ட மட்ட நிலை

மாகாண தமிழ்மொழித்தினப் போட்டிகளில் தேசிய மட்டநிகழ்ச்சிகளை மட்டும் கொண்டு மாவட்ட மட்ட முடிவுகள்,நிலைகள் வருமாறு திருகோணமலை -98,யாழ்ப்பாணம்-94,வவுனியா-64,மட்டக்களப்பு-63,கல்முனை-35,மன்னார்-30,கிளிநொச்சி-29,முல்லைத்தீவு-11. (உ-83)

## இன்று ஒரு தகவல்

# அபூர்வ தற்காப்பு அமைப்பு

அமெரிக்காவின் வட பகுதியில் ''மிக்சிகன் ஏரி'' என ஒன்று உண்டு. அந்த ஏரியில் ஜனவரி மாதத்தில் தண்ணீரே இருக்காதாம். வேறென்ன இருக்கும் என்கிறீர்களா? பனிக்கட்டி தான் இருக்குமாம். குளிர் அதிகமாக இருப்பதனால் தண்ணீர் உறைந்து போய் பனிக்கட்டியாகிவிடும். அந்த நேரத்தில் அங்கு சென்று சறுக்கி விளையாடுவோரும் உள்ளனர்.

1984ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 15ஆம்திகதி ஓர் தந்தையும் மகனும் அவ்வாறு விளையாடிக்கொண்டிருந்தனர். மகனின் பெயர் ஜிம்மி 4வயது. திடீரென்று என்ன நடந்தது தெரியுமா? ஐஸ்தரை பிளந்து அந்தச் சிறுவன் உள்ளே சென்று விட்டான். இதை யாரும் கவனிக்கவில்லை. சிறுவனைக் காணவில்லை என்று தேடிக் கண்டு பிடிப்பதற்குள் 20 நிமிடங்கள் ஆகி விட்டது. இறுதியாக அவனைக் கண்டு பிடித்து வெளியில் இழுத்தனர். பார்த்தால் சிறுவன் உறைந்து போய்க் கிடந்தான். மூச்சு வரவில்லை. இதயத்துடிப்பு நின்று விட்டது. அப்படி என்றால் என்ன அர்த்தம்? சிறுவன் இறந்து விட்டான் என்று தானே அர்த்தம்.

இருந்தாலும் அங்கிருந்தவர்கள் முயற்சியைக்கைவிடவில்லை. அருகிலுள்ள மருத்துவமனைக்குத் தகவல் கொடுத்தனர். உடனே அங்கிருந்த டாக்டர்கள் மின்னல் வேகத்தில் வந்தனர். உறைந்து போய்க்கிடந்த அந்தச் சிறுவனுக்கு உடனடியாக ''ஹார்ட் மஸாஜ்'' செய்து பார்த்தனர். இரத்தக்குழாயின் வழியாக மருந்து செலுத்தினர். நுரையீரலினுள்ளே தொடர்ந்து காற்றை ''பம்ப்'' செய்தனர். தசைகள் நாசமடையாமல் இருக்கவேண்டுமே? அதற்காக ஹூட் லேம்ப்களை உடலின் மீது பரப்பி உடலைச் சூடாக்கினார்கள்.

இவையெல்லாம் சரி. இருந்தாலும் இருதயத்தை ஓடவைக்க வேண்டுமே? அதுதான் முக்கியம். அதற்காக ஐந்து முறை மின் அதிர்ச்சி வைத்தியம் கொடுத்துப் பார்த்தனர். பலனேதும் இல்லை. இருந்தாலும் சிறிது நேரத்தில் ஒரு நம்பிக்கை ஏற்பட்டது. என்ன நடந்தது தெரியுமா? இறந்துபோன நிலையில் இருந்த சிறுவன் லேசாக கோமா நிலைக்கு வந்தான். அதாவது, மூச்சு மட்டும்லேசாக வந்து கொண்டிருந்தது. மற்றபடி எல்லாம் இறந்தது போலத்தான். அதன் பின்பு அந்தச் சிறுவனை மருத்துவமனைக்குக் கொண்டு சென்றனர். மிக்சிகனில் குழந்தைகளுக்கான மெமோறியல் மருத்துவமனை ஒன்றுள்ளது. அங்குதான் இச் சிறுவனைக் கொண்டு சென்றனர்.

கோமா நிலையிலிருந்து திடீரென மீண்டால் கூட ஆபத்துத் தானாம். மூளை வீங்கி விடுமாம்.இதற்காக அந்தச்சிறுவனுக்கு மருந்து கொடுத்து 80 நாட்கள் மயக்க நிலையில் வைத்திருந்தனர். மருத்துவர்களுக்கும் இந்தச் சிறுவனுக்கும் போராட்டம் தான். பின்னர் சிறிது நம்பிக்கை வந்தது. ஆமாம், சிறுவ்ன் சிறிதாக கண்ணைத்திறந்தான். ஒரு வாரம் சென்ற பின் மெதுவாகச் சிரித்தான். பின் கொஞ்சம் கொஞ்சமாக கைகால்களை அசைத்தான். நான்கைந்து மாதங்களில் வீடு திரும்பி விட்டான்.

இது ஒரு ஆச்சரியமான விடயம் தான்! ஏனென்றால் 20 நிமிடத்திற்கு நாலு வயதுச் சிறுவன் ஐஸ் தண்ணீரில் மூழ்கியிருப்பது சாதாரண விஷயம் இல்லை. ஒட்சிசன் இல்லாத நிலையில் மூளை பழுதடைந்து விடும். உயிர் தப்பவே முடியாது. அப்படியிருந்தும் அந்தச் சிறுவன் தப்பி விட்டான் என்றால் அது எப்படி? அந்த மருத்துவர்கள் என்ன கூறுகின்றனர் என்றால், ''நவீனமான சிகிச்சை முறைகள் இதற்குமிகவும் உதவி வழங்கியது உண்மைதான். ஆயினும், அந்தச்சிறுவன் உயிர் தப்பியதற்கு முக்கியமான காரணம். அவனது உடலில் இருந்த விசித்திரமான தற்காப்பு மெக்கானிசம்'' என்கின்றனர்.

அது என்ன தற்காப்பு மெக்கானிசம்? திமிங்கிலம், ஸீல் போன்ற கடற்பிராணிகள் அடிக்கடி ஐஸ் தண்ணீரில் டைவ் அடிக்க வேண்டியிருக்கும். அப்போது ''நெர்வஸ் சிஸ்டம்'' மூளைக்கு சமிக்ஞை கொடுக்கும். உடனே ஒட்சிசன் நிரம்பிய இரத்தம் முழுதும் மூளைக்கும், இதயப்பகுதிக்கும் மாற்றலாகும். இந்த நிலையில் உடல் உறைந்து போனால் கூட சிறிது சிறிதாக அந்த ஒட்சிசனை இரத்தம் இதயத்துக்கும், மூளைக்கும் பரிமாறி அவை பழுதடையாது பாதுகாக்கும். திமிங்கிலத்திற்கு உள்ள இந்த சிறப்பு மெக்கானிசம் இலட்சக்கணக்கான மனிதர்களில் அதிசயமாக ஓரிருவரிடம் தான் இருக்கும். இந்தச் சிறுவன் அதிர்ஷ்டவசமாக அவ்வாறு இருந்து விட்டான். அதனால் அவன் தப்பி விட்டான்.

இது என்ன அதிசயம்? அண்டார்டிக் ஆராய்ச்சியில் ''வெட்டல்'' எனும் கடலுக்குத் தென்புறத்தில் சில வகை மீன், நண்டுகள் பனி நீரில் பக்குவமாக வாழ்ந்து கொண்டிருக்கின்றதாம். உயிரியல் வல்லுநர்களே ஆச்சரியப்படுகின்றனர். இவற்றின் மெக்கானிசம் எப்படி என்று தெரிந்து கொண்டால், அவை எமக்கும் பலவிதத்தில் உதவியாக இருக்கும்.

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

இடைக்கால நிர்வாக சபை திட்டவரைபு குறித்து

# அரசு ஒளிவு மறைவுடன் செயற்பட்டதால் பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளது

## பொ.ஐ.மு.ஊடகப்பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாண இடைக்கால நிர்வாகசபைத் திட்டவரைபு குறித்து ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் ஒளிவு மறைவுடன் செயற்பட்டதால், அது பல சிக்கல்களை எதிர்நோக்கியுள்ளது என பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஊடகப்பேச்சாளர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட சரத்அமுனுகம, தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு நோர்வே அரசாங்கம் ஊடாக அனுப்பி வைத்துள்ள இடைக்கால நிர்வாக சபை தொடர்பான யோசனைகளில் என்னென்ன விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன என்பது குறித்து கண்டறிய வேண்டிய கட்டாய நிலையில் பொதுஜன ஐக்கிய முன்னணி உள்ளது.

அரசாங்கம் ஜனாதிபதியையா? தமிழீழ விடுதலைப்புலிகளையா? அல்லது பொதுமக்களையா? ஏமாற்றமுறப்படுகிறது என்பது குறித்து எங்களால் அறியமுடியாமல் இருக்கிறது.

தற்போது புலிகளிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இடைக்கால நிர்வாக சபைத் திட்டவரைபு குறித்து பாராளுமன்றத்துக்கோ அல்லது ஜனாதிபதிக்கோ இதுவரை அறிவிக்கப்படவில்லை. இதனால் அரசு கையறு நிலையில் உள்ளது எனவும் தெரிவித்துள்ளார். (தி)

# ரெலிக்கொம் நிறுவனத்திற்கு எதிராக ஜப்பான் நிறுவனம் சட்ட நடவடிக்கை

(கொழும்பு)

உளளூர் தொலைபேசிக் கட்டணத்தை உயர்த்த மறுத்தமைக்காக ஸ்ரீலங்கா ரெலிக்கொம் நிறுவனத்தின் மீது ஜப்பான் தொலைபேசி நிறுவனமான நிப்பொன், சர்வதேச நீதிமன்றில் விரைவில் வழக்குத்தாக்கல் செய்யவுள்ளது.

ஸ்ரீலங்கா ரெலிக்கொம் நிறுவனத்துடன் இணைந்து செயற்பட்டு வந்த மேற்படி ஜப்பானைச் சேர்ந்த நிப்பொன் நிறுவனம்,கடந்த சில மாதங்களாக உளளூர் தொலைபேசிக் கட்டணத்தை உயர்த்துமாறு ஸ்ரீலங்கா ரெலிக்கொம் நிறுவனத்தை வலியுறுத்தி வந்தது. அத்துடன் ஏற்கனவே இது தொடர்பான ஒப்பந்தம் ஒன்றிலும் மேற்படி இரு நிறுவனங்களும் கைச்சாத்திட்டிருந்தன.

இந் நிலையில் இதுவரை ஸ்ரீலங்கா ரெலிக்கொம் நிறுவனம் உள்ளூர்க் கட்டணத்தை உயர்த்தவில்லையெனக் குற்றம் சாட்டிய நிப்பொன் நிறுவனம்,இதற்கெதிராக சர்வதேச நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்போவதாக எச்சரித்துள்ளது. (உ-10)

## நீர்ப்பாசனத் திணைக்களம்

# அதிகார சபையின் கீழ் கொண்டுவரப்படாது

(கொழும்பு)

நீர்ப்பாசனத் திணைக்களத்தை மூடிவிடுவதோ அல்லது அதிகாரசபை ஒன்றிடம் கையளிக்கும் திட்டமோ அரசாங்கத்துக்கு இல்லையென நிர்வாக முகாமைத்துவ வடிகாலமைப்பு அமைச்சர் காமினி ஜெயவிக்கிரம பெரேரா தெரிவித்துள்ளார்.

பிங்கிரியாவில் புதிய நீர்ப்பாசனத் திட்டமொன்றை நேற்று முன்தினம் ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்தும் பேசிய அமைச்சர்,சில குழுக்கள் தங்களது அரசியல் நோக்கம் காரணமாக நீர்ப்பாசனத திணைக் களம் தொடர்பாக வதந்திகளை பரப்பி வருகின்றன என்றார். (தி)

## இராசி பலன்

**27.07. 2003**

(ஆடி 11, ஞாயிறு)

திரயோதசி ந.ப. 12.02வரை
திருவாதிரை மு.இ. 8.23வரை
இராகுகாலம்- 4.32-6.02
சுபநேரம்- 9.02-10.32

**மேடம்**
தடைப்பட்டகாரியம் கைகூடும், உறவினர் வருகை, பெருமையடைதல், பொருள் சேர்க்கை.

**இடபம்**
மனோசங்கடம், தெய்வ தரிசனம், தந்தை வழி உறவு, வீண் செலவு.

**மிதுனம்**
கடுமையான வார்த்தை, அறிஞர் சந்திப்பு, மாதர் நட்பு, முயற்சி கைகூடும்.

**கடகம்**
பிரயாணம், எடுத்த காரியம் தாமதமாகும், உஷ்ணவியாதி, புத்தி சாதுரியம்.

**சிங்கம்**
நண்பர்கள் சந்திப்பு, செய்தொழிலால் நன்மை, விருந்துபசாரம், தன வரவு.

**கன்னி**
ஆரோக்கியம், புதிய முயற்சி, எதிர் பாராத நன்மை, பிரயாணம்.

**துலாம்**
புதிய திருப்பம், கட்டுப்படுதல், போசன சுகம், முயற்சி தாமதம்.

**விருச்சிகம்**
காரிய தடங்கல், மனத்தாக்கல், அபகீர்த்தி, பணத்தட்டுப்பாடு.

**தனுசு**
தெய்வ சிந்தை, பிறருக்கு உதவுதல், பிரயாணம், காரிய அனுகூலம்.

**மகரம்**
தேக நலன், பாராட்டு, முயற்சிகைகூடும், சத்துருஜெயம்.

**கும்பம்**
கௌரவக்குறைவு, திடீர் நன்மை, உறவினர் சந்திப்பு, முயற்சி தாமதம்.

**மீனம்**
உடல் நலக்குறைவு,காரிய தாமதம், தொழில் மந்தம், தாய்வழி உறவு.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)
- வளவன்.

# வடக்கு-கிழக்கு மக்களின் பிரச்சினைகள் இன்னமும் தீரவில்லை

## சட்டத்தரணி சிறால்லக் திலக தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு -கிழக்கு மக்கள் எதிர்நோக்கியுள்ள பல பிரச்சினைகள் இன்னமும் தீர்வு காணப்படாது உள்ளன என சட்டத்தரணி சிறால்லக்திலக தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

தமிழீழ விடுதலைப்புலிகளினாலும், அரசாங்கத்தாலும் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கை காரணமாக இப்பிரதேச மக்களின் வாழ்க்கையில் இயல்பு நிலை ஏற்பட்டுள்ளது.

இப்பிரதேச மக்கள் கடந்த இரு தசாப்தங்களாக யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.பொருளாதாரத்தடையை அரசாங்கம் நீக்கியமையே யுத்த நிறுத்த உடன்படிக்கையில் அவர்களுக்குக் கிடைத்த நன்மையாகும்.

வடக்கு-கிழக்குப் பகுதியில் வாழும இளைஞர்,யுவதிகளின் நீண்டகாலப் பிரச்சினைக்கு தீர்வு கிடைக்காத காரணத்தாலேயே ஆயுதப் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

இப்போராட்டத்தினால் நாடு முழுவதும் அரசியல் கூட்டமைப்பும், பொருளாதாரமும் சீர் குலைந்தன.

ஐக்கிய தேசிய முன்னணி அரசு விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் செய்து கொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கையால் நாட்டின் பொருளாதாரம் ஓரளவு வளர்ச்சி கண்டு வருகிறது.

சமாதான முயற்சிகளில் கிடைக்கும் வெற்றிகளைப் பயன்படுத்தி நாட்டை முன்னேற்றுவதற்கு சகல இனப் பிரஜைகளும் தங்களை அர்ப்பணித்துக்கொள்ள வேண்டும்.

வடக்கு-கிழக்கில் இடைக்கால நிர்வாகசபைக் கட்டமைப்பை உருவாக்கி, நிரந்தர சமாதானத்தை நிலைநாட்டும் வரை அனைத்து மக்களும் ஒத்துழைப்புடன் செயற்பட வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார். (தி)

# பல்கலைக் கல்வி மேம்பாட்டுக்கு உலக வங்கி நிதி உதவி

(கொழும்பு)

பல்கலைக்கழக கல்வி மேம்பாட்டுத திட்டத்திற்கென உலக வங்கியின் சர்வதேச அபிவிருத்திச் சங்கம் 4 கோடி 3 இலட்சம் அமெரிக்க டொலரை கடனாக வழங்க முன் வந்துள்ளது.

5 கோடி 10 இலட்சம் அமெரிக்க டொலர் செலவிலான இத்திட்டத்திற்கு அரசாங்கம் ஒரு கோடி 7 இலட்சம் அமெரிக்க டொலரை வழங்கவுள்ளது.

இது தொடர்பாக நிதி அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில்,

அரசாங்கத்தின் இரண்டாம் நிலைக் கல்விச் சீர் திருத்தங்களுக்கான நீண்டகாலத் திட்டத்திற்கு இந் நிதி உதவியாக இருக்கும்.

இது தொடர்பான உடன்படிக்கையில் உலக வங்கியின் இலங்கைப் பணிப்பாளர் பீற்றர் ஹரோல்ட், நிதி அமைச்சின் செயலாளர் சரித்த ரத்வத்தை ஆகியோர் அண்மையில் கைச்சாத்திட்டுள்ளனர். (தி)

# தமிழர்க்கு வழங்கப்படும் தனி நிர்வாகம் நாட்டை ஒரு போதும் கூறுபோடாது

## அமைச்சர் மகிந்த விஜயசேகர

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணத்திற்கு இடைக்கால நிர்வாகசபை வழங்கப்படுவதன் மூலம் நாடு பிளவு படமாட்டாது என மீன்பிடித்துறைஅமைச்சர் மகிந்த விஜயசேகர தெரிவித்துள்ளார்.


வெலிக்கடையில் உள்ள இரு பாடசாலைகளின் தொழில் நுட்ப நிலையங்களைத் திறந்து வைத்து உரையாற்றுகையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர்,

பொது ஜன ஐக்கிய முன்னணி ஆட்சிக்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட சமாதான முயற்சிகளின் போது, வடக்கு-கிழக்கு மாகாணத்திற்கு இடைக்கால நிர்வாக சபை வழங்குவதன் மூலமே இனப்பிரச் சினைக்குத் தீர்வு காணமுடியும் என ஜனாதிபதி கூறியிருந்தமையையும் அமைச்சர் சுட்டிக் காட்டினார்.

நாட்டை சீரழிவுக்கு இட்டுச் செல்லும் இரு கட்சிகளின் கூட்டமைப்பை விட, அரசும் ஜனாதிபதியும் ஒன்றிணைந்து பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவேண்டும்.

முரண்பாடுகளை மறந்து ஒன்றிணைந்து செயற்படுவதன் மூலம் நாட்டின் பொருளாளாரத்தையும் மக்களின் வாழ்க்கைத் தரத்தையும் மேம்படுத்துவதற்கான வாய்ப்புக் கிட்டும் எனவும் தெரிவித்துள்ளார். (தி)



தமிழர் விடுதலைக்கூட்டணியின் முன்னாள் தலைவர் அமரர் எம். சிவசதம்பரத்தின் முதலாம் ஆண்டு நினைவு தின நிகழ்வை சிவஸ்ரீ எஸ்.சச்சிதானந்தக்குருக்கள் மங்களவிளக்கேற்றி ஆரம்பித்து வைக்கிறார்.

### காரை.பிரதேச செயலக பிரிவில்

## சமுர்த்தி செயலணி திட்டங்கள் ஆரம்பம்

(காரைநகர்)

காரைநகர் பிரதேச செயலர் பிரிவில் கிராமசேவையாளர் பிரிவு ரீதியாக சமுர்த்தி செயலணி உருவாக்கப்பட்டு வருகின்றது.

சமுர்த்தி அமைப்பினூடாக பிரதேச அபிவிருத்தியை மேற்கொள்வதற்கான ஆரம்ப நடவடிக் கையாகவே இச்செய லணி ஏற்படுத்தப்பட்டு வருகின்றது.

இதில் 18-35வயதுக்குட்பட்டவர்கள் அங்கம் வகிப்பதுடன் பொது அமைப்புகளின் பிரதி நிதிகளும் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

முதற்கட்டமாக காரைநகர் மேற்கு சமுர்த்தி செயலணி ஊடாக சமுர்த்தி அதிகார சபையின் உதவியுடன் காரைநகர் மருதபுரம் பகுதியில் பொதுக்கிணறு அமைக்கும் பணிமேற்கொள்ளப் படவிருப்பது குறிப்பிடத்தக்கது. (உ-246)



ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலயமும் இந்து கலாசார அமைச்சும் இணைந்து புலோலியில் அமைந்துள்ள கணனிப் பயிற்சி நிலையத்திறப்பு விழாவின் போது, இந்து கலாசார அமைச்சர் தி. மகேஸ்வரன் கணனியை இயக்கி பயிற்சிகளை ஆரம்பித்து வைக்கிறார்.

## ரொக்கட் லோஞ்சர் மீட்பு

(கொழும்பு)

பிந்துனுவெவ பண்டாரவளைப் பகுதியில் உள்ள வீடொன்றிலிருந்து ரொக்கட் லோஞ்சர் ஒன்று நேற்று முன்தினம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

கண்டு பிடிக்கப்பட்டரொக்கட் லோஞ்சர் மூலம் 61 மில்லி மீற்றர் ரக குண்டுகளை 2 கிலோமீற்றர் தூரத்திற்கு துல்லியமாக செலுத்த முடியும் என்று கண்டறியப்பட்டுள்ளது.இது தொடர்பாக பிரபல வர்த்தகர் ஒருவரை பதுளைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். இவர் மீது நடத்தப்பட்ட விசாரணைகளின போது இவ்ரொக்கட் லோஞ்சாரை யாழ்ப்பாணம் சென்ற போது கொண்டு வந்தாக அவர் தெரிவித்துள்ளார் (தி)

### சிறைச்சாலை

## ஆணையாளருக்கு எதிராக மனு ஆட்சேபம் வெளியிட அவகாசம்

(கொழும்பு)

சிறைச்சாலை ஆணையாளர் புறூமமர்சூத்துக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான ஆட்சேபனைகளைத் தெரிவிக்க கட்சிகளுக்கு அடுத்தமாதம் 25ஆம் திகதி வரை உச்ச நீதிமன்றம் கால அவகாசம் வழங்கியுள்ளது.

இம்மனுவை 25ஆம்திகதி விசாரிக்க ஏற்பாடுகளைச் செய்யுமாறு உச்ச நீதிமன்றம் பணிப்பாளரைப் பணித்துள்ளது.

நீதியரசர் எச்.எஸ்.யாப்ப நீங்கலாக ஏனைய நீதியரசர்கள் கொண்ட குழுவினால் இம் மனு மீதான விசாரணை மேற்கொள்ளப் படவுள்ளது.

சட்டத்துக்கு முரணான வகையில் சிறைச்சாலை ஆணையாளர் பதவி இவருக்கு வழங்கப்பட்டது எனவும் இப்பதவியை வகிப்பதற்கு இவர் தகுதியற்றவர் எனவும் அம் மனுவில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. (தி)



பருத்தித்துறை தும்பளை லூர்த்து மாதா முகாமிலுள்ள வசதி குறைந்தவர்களுக்கு பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஸ்ண சாரதா சேவாச்சிரமம் சத்துணவு வழங்கும் திட்டத்தை நடைமுறைப் படுத்தி வருகின்றது. முகாமில் உள்ளவர்களுக்குச் சுவாமி சித்ருபானந்தா சத்துணவுகளை வழங்குவதைப் படத்தில் காணலாம்.

## மண்ணியல் நிபுணர்கள் மணற்காட்டில் ஆராய்ச்சி

(யாழ்ப்பாணம்)

கனியவளத் திணைக்களப் பிரதிப்பணிப்பாளர் அனில் பீரிஸ் மற்றும் புவியியல் ஆராய்ச்சியாளர் உதய டி சில்வா ஆகியோர் மணற்காட்டுப் பகுதியில் இருந்து மணல் அகழ்வது தொடர்பாக ஆராய்ந்து வருகின்றனர்.

நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வந்துள்ள இவர்கள் மணற்காட்டின் மண் வளம், அங்கு மணல் அகழ்வு மேற்கொள்ளப்பட வேண்டிய ஆழம் ஆகியன குறித்தே ஆராய்ந்து வருகின்றனர்.

இதேவேளை,தாம் பெற்ற அனுபவங்களினடிப்படையில் நாளைய தினம் யாழ். செயலகத்தில் யாழ். அரசாங்க அதிபர் செ. பத்மநாதன் மற்றும் பருத்தித்துறை, மருதங்கேணி பிரதேச செயலர்கள், துறை சார்ந்த சிரேஷ்ட பொறியியலாளர்கள் ஆகியோருடன் கலந்துரையாடல் ஒன்றையும் இவர்கள் நிகழ்த்தவுள்ளனர். (உ)



உள்ளூராட்சி வாரத்தையொட்டி பருத்தித்துறை நகர சபை உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் பருத்தித்துறை பொதுச் சந்தையில் சிரமதானத்தில் ஈடுபட்டுள்ளதை படத்தில் காணலாம்.

### கிருஷாந்தி படுகொலை வழக்கு

## மரணதண்டனைக் கைதிகளின் மேன்முறையீடு விசாரணைக்கு

(கொழும்பு)

யாழ். சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி கிருஷாந்தி குமாரசாமி மற்றும் போகந்தறைப் படுகொலை வழக்குகளில் மரண தண்டனைத் தீர்ப்பளிக்கப்பட்டவர்கள் தாக்கல் செய்த மேன்முறையீட்டு மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

இதற்கான அனுமதியினை உச்ச நீதிமன்றம் வழங்கியுள்ளது.

இம்மேன்முறையீட்டை விசாரணை செய்வதற்கு வசதியாக பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா தலைமையிலான 3 நீதியரசர்கள் குழு எதிர் வரும் புதன்கிழமை தொடக்கம் இவ்விரு வழக்குகள் தொடர்பான தகவல்களைச் சேகரிக்கவுள்ளது.

இவ்வழக்கு விசாரணைகளை 5 நீதியரசர்கள் கொண்ட குழு மேற்கொள்ளவுள்ளது.

கிருஷாந்தி குமாரசாமி படுகொலை வழக்கில் மரண தண்டனைத் தீர்ப்பளிக்கப்பட்ட 6 இராணுவத்தினருக்கும் எதிரான மேன்முறையீட்டு மனு விசாரணைகளின் போது, தமது சொந்தக் காரணங்களின் அடிப்படையில் விசாரணைகளை மேற்கொள்ளும் நீதியரசர்கள் குழுவில் தான் அங்கம் பெறமாட்டாரென பிரதம நீதி அரசர் சரத் என் சில்வா தெரிவித்துள்ளார்.

போகந்தறைக் கொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்ட நாலுபேரும்,கிருஷாந்தி குமாரசாமி கொலை வழக்கில் மரணதண்டனை விதிக்கப்பட்ட 6 இராணுவத்தினரும் இம் மேன்முறையீட்டைச் செய்திருப்பது குறிப்பிடத்தக்கது. (தி)

## பத்மநாதனின் திருவுருவப்படம் நல்லை ஆதீனத்தில் திரை நீக்கம்

(யாழ்பாணம்)

நாதஸ்வர வித்துவான் அமரர் என்.கே. பத்மநாதனின் திருவுருவப் படத் திரை நீக்கமும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை உரைகளும் எதிர் வரும் 2 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4 மணிக்கு நல்லை திரு ஞானசம்பந்தர் ஆதீன கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகன் தலைமையில் இடம் பெறும் இந்நிகழ்வில், அன்னாரின் திருவுருவப்படத்தை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் திரைநீக்கம் செய்து வைக்க, வரவேற்புரையை எஸ்.குணராஜாவும்,பிரார்த்தனை உரைகளை நல்லை ஆதீன முதல்வர் மற்றும் அருட்கவி சி. விநாசித்தம்பி ஆகியோர் ஆற்றவுள்ளனர்.

ஆத்மசாந்தி உரைகளை அரச அதிபர் எஸ். பத்மநாதன், யாழ். பேராசிரியர் சு.மோகனதாஸ்,யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன்,யாழ்.மாவட்ட நீதிபதி இ.த.விக்னராஜா, யாழ். பல்கலைக் கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் கோபாலகிருஷ்ண ஐயர், ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி ஏ.ஈ.ஏகநாதன், இளைப்பாறிய ஆசிரியை செல்வி செ.புஸ்பா, நாதஸ்வர வித்துவான் கலாபூசணம் என்.ஆர்.சுந்தரமூர்த்தி, சங்கீத பூசணம் எஸ். கணபதிப்பிள்ளை, பேராசிரியர் ஏ.சண்முகதாஸ், இந்து கலாசார அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் து. வைத்திலிங்கம், மூத்த எழுத்தாளர் கலாநிதி க. குணராஜா, யாழ். வர்த்தக வங்கி முகாமையாளர் சரவணபவன் ரவீந்திரா, கலாநிதி எஸ். திருநாவுக்கரசு, வைத்திய நிபுணர் த.பேரானந்தராஜா, மூத்த பத்திரிகையாளர் செ. நடராஜா, க. சோமசேகரம் ஆகியோர் நிகழ்த்த (உ)



உடுப்பிட்டி இமையாணன் விநாயகர் பாலர் பாடசாலைச் சிறுவர்கள் அண்மையில் உள்ளூர் கல்விச்சுற்றுலாஒன்றை மேற்கொண்டிருந்தனர். சுற்றுலாவின்போது பூங்கனிச்சோலைக்குச் சென்ற சமயம் பிடிக்கப்பட்ட படம்.

படங்கள் : பரு. நிருபர்.

# நீண்ட பெரும் இடைவெளிக்குப் பின்

# யாழில் பல்லின மாணவர்கள் கூடிய மாகாணத் தமிழ் மொழித்தின விழா

'தமிழுக்கும் அமுதென்று பேர்-அந்தத் தமிழ் இன்பத்தமிழ் எங்கள் உயிருக்கு நேர்!'

என்று அழகாக எடுத்துச்சொல்கிறார் பாவேந்தர் பாரதிதாசன். 'யாமறிந்த மொழிகளிலிலே தமிழ் மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்' என்று பெருமிதம் பொங்கிட உரைக்கின்றார். மகாகவி பாரதியார். உலகின் இருளை அகற்றுவதில் ஒப்பற்று நிற்பன 'மின்னேர் தனியாழி வெங்கதிர் ஒன்று ஏனையது தன்னேர் இலாத தமிழ்' என்று தண்டியலங்கார மேற்கோள் பாடல் குறிப்பிடுகின்றது.

'இருந்தமிழே உன்னால் இருந்தேன்-இமையோர் விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்' என்று 'தமிழ் விடுதூது' கோடிட்டுக் காட்டுகிறது. 'இனிமையும் நீர்மையும் தமிழெனல் ஆகும்' என்று பேசுகிறது பிங்கலம் 'தேனுறை தமிழ்' என்று கல்லாடமும், 'தமிழ் தழீஇய சாயல்' என்று சிந்தாமணியும் போற்றுகின்றன.

பொருப்பிலே பிறந்து தென்னன் புகழிலே
- இடந்து சங்கத்
திருப்பிலே இருந்து வையை ஏட்டிலே
- தவழ்ந்த பேதை
நெருப்பிலே நின்று கற்றோர் நினைவிலே
- நடந்து ஓர்ஏன
மருப்பிலே பயின்ற பாவை மருங்கிலே
- வளருகின்றாள்.

என்று வில்லி பாரதப் பாயிரம் வியந்து போற்றுகின்றது. 'தண்டமிழ் மதுரம் கூட்டுண எழுந்த வேட்கையால் எனில் இக் கொழி தமிழ்ப் பெருமை யார் அறிவார்?' என்று குமர குருபரர் குறித்து மகிழ்கின்றார். 'எத்திசையும் புகழ்மணக்க இருந்த பெருந்தமிழ் அணங்கே' என்று மனோன்மணியம் ஆசிரியர் பேராசிரியர் சுந்தரம்பிள்ளை மகிழ்ந்து பாடுகின்றார். இந்நாட்டவர் மாத்திரமல்லர்-தமிழின் அழகிலும் ஆழத்திலும் ஈர்க்கப்பட்டு தம்மைஇழந்த அயல் நாட்டவர்களும் சூட்டிய புகழாரங்கள் ஆயிரமாகும்.

டாக்டர் கிரௌல் 'தமிழ் மொழியை அழகான சித்திர வேலைப்பாடமைந்த வெள்ளிக்கலன் என்றும் திருக்குறளை அதில் வைக்கப்பட்ட தங்க ஆப்பிள்' என்றும் 'தமிழ் என்னை ஈர்த்தது குறளோ! என்னை இழுத்தது' என்றும் புகழ்கின்றார். டாக்டர் கால்டுவெல் அவர்கள் 'உலகில் மிகச் சிலவான மொழிகளுக்குத்தான் அறிவியல் அடிப்படையிலான இலக்கணம் அமைந்துள்ளது. அவற்றில் தமிழே முன்நிற்கிறது. தொல்காப்பியமும் நன்னூலுமே இதற்கு மாபெரும் சான்றுகள்' என்று குறிப்பிடுகின்றார்.

* மொழி எப்பொழுதுதோன்றியது என்றால் மனிதன் சமூகமாக என்று வாழத் தொடங்கினானோ அன்றுதான். சமூகஉறவு மலர மொழி இன்றியமையாதது. மக்களை அடையாளம் காட்டும் கருவியும் மொழிதான். மொழியை வைத்துத்தான் மக்களை அறிமுகப்படுத்துகின்றனர். தமிழைவைத்துத்தான் தமிழர்கள் என்கின்றோம். ஆங்கிலத்தை வைத்து ஆங்கிலேயர்கள் என்கின்றோம்.

எவ்வாறு ஒவ்வோர் இனமக்களுக்கும் ஞாலம்தோன்றிய காலத்திலிருந்து ஒப்புவமையிலாத் தனி வரலாறு உண்டோ அதேபோல் மொழி வரலாறும் உண்டு. அம்மக்களின் உயர்வு தாழ்வுகளில் இணைந்தும் பிணைந்தும் வரும் வரலாறு அம்மொழிக்கும் உண்டு. தமிழ்மொழி வளர்ந்த வரலாறு தமிழ்மக்கள் வாழ்ந்த வரலாறுதான்.

ஓர் இனமக்கள் நாகரிகத்திலும் பண்பாட்டிலும் சிறந்தோங்கி நிற்கவேண்டுமானால் அந்த இனமக்கள் பல்வேறுவகைப்பட்ட கலை அறிவுமிக்கவர்களாக 'இருக்க வேண்டும்.

மக்கள் கலையறிவில் வல்லமை பெறவேண்டுமானால் அவர்கள் ஆழ்ந்து பரந்து உயர்ந்த கல்வி அறிவு பெற்றவர்களாகத் திகழ வேண்டும்.

ஒரு சமூகம் சிறந்த கல்வியறிவு பெற வேண்டுமாயின் கற்பிக்கப்படும் மொழி செழுமைவாய்ந்த சிறந்த மொழியாக இயங்க வேண்டும். எனவே மொழியின் சிறப்பைப் பொறுத்து கல்வி அறிவும், கல்வியறிவின் திறத்தைப் பொறுத்துக் கலையறிவும் அக்கலையறிவின் ஆற்றலைப் பொறுத்து நாகரிகமும் பண்பாடும் சிறந்துவிளங்கும் என்பது தெளிவுபடும்.

* இந்த வகையிலேதான் ஒரு ஆரோக்கியமான செழுமைமிக்க சமூகத்தை காலந்தோறும் உருவாக்கி பெருமை பெறுவதற்காக தமிழ்த்தினப் போட்டிகளும் விழாக்களும் நாடெங்கிலும் நடாத்தப்படுகின்றது. தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும்வகை செய்தல்வேண்டும் என்பது புதுமைக் கவிஞர் பாரதியாரின் பொன் மொழியாகும். நறைபழுத்த துறைத் தீந்தமிழின் ஒழுகும் நறுஞ்சுவையை நனிசொட்டச் சொட்ட உல கோர்க்கு அறிமுகப்படுத்தவும், உலககோரை அறியச்செய்யவும் நாம் மேற்கொள்ளும் முயற்சிகளில் ஒன்றுதான் ஆண்டுதோறும் மாவட்ட ரீதியாக நடாத்தப்படுகின்ற தமிழ் மொழித்தினம்.

பல ஆண்டுகளுக்குப் பின்னாலே ஈழத்தமிழன்னையின் தாய் வீடாம் யாழ்ப்பாணத் திருநகரில் தமிழ்த்தினப் போட்டிகளும் விழாக்களும் நடைபெறுவது மகிழ்ச்சியைத் தருகின்றது. கடந்த 25.07.2003 வெள்ளிக்கிழமை யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள புகழ்பூத்த கல்லூரிகளான யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி, யாழ்.மத்தியகல்லூரி, யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலை, யாழ். இந்துமகளிர் கல்லூரி போன்ற கல்லூரிகளின் எட்டு மாவட்டங்களைச் சார்ந்த மாணவ, மாணவியர் தமது

**மதுரகவி**

கல்வி, கலை, மொழிசார்ந்த முத்தமிழ் திறன்களையும் வெளிக்கொணர்ந்து போட்டிகளில் கலந்து கொண்டனர்.

2500ற்கும் மேற்பட்டோர் மாகாண தமிழ்மொழித்தின நிகழ்வுகளில் கலந்துகொண்டுள்ளனர். கல்வி அமைச்சிலிருந்து செயலாளர் உயர்திரு ச.தியாகலிங்கம் அவர்கள், திரு. எம்.ஐ.எம்.இஸ்ஸதின், எஸ்.கிருஸ்ணகுமார், ரி.இராசேஸ்வரன் ஆகியோரும், வடக்கு-கிழக்கு மாகாண கல்வி புலத்திலிருந்து மேலதிக மாகாண கல்விப்பணிப்பாளர் வீ.இராசையா, பிரதிக்கல்விப் பணிப்பாளர் வி.மகேந்திரன், உதவிக் கல்விப்பணிப்பாளர்களான இ.முருகுப்பிளளை, ந.அனந்தராஜ், திருமதி பி.செல்வின் இரேனியஸ், ஏ.வித்தியானந்தமூர்த்தி, ஏ.ஆர்.எம்.ராபி, செல்வி அ.கனகசூரியர், திருமதி எஸ்.கணேசலிங்கநாதன், செ.மகேஷ ஆகியோரும் கலந்து மாகாண தமிழ்த்தினப் போட்டிகளை சிறப்பாக நடத்தினர். இவர்களுக் கெல்லாம் தலைமைதாங்கி இவ் நிகழ்வுகளை நெறிப்படுத்திக் கொண்டிருப்பவர் மாகாண கல்விப்பணிப்பாளர் எஸ்.மகாலிங்கம், இவர்களுடன் யாழ்.மாவட்ட வலயக்கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், முதன்மை ஆசிரியர்களும் இணைந்துகொண்டுள்ளனர். பல மாவட்டங்களிலிருந்தும் நடுவர்களாக பணியாற்ற பலர் வந்துள்ளனர்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, கல்முனை, மாவட்டங்கள் சார்ந்த அறிஞர்களும் கலைஞர்களும், கல்விமான்களும், மாணவர்களும் நீண்டகாலத்திற்கு பின்பு யாழ்ப்பாணம் வந்திருக்கின்றார்கள்.

இந்த உறவுப பாலம் விரிவடைவதைப்பார்க்கின்ற பொழுது எல்லோருக்கும் மனதை விட்டகலாத நிறைவான மகிழ்வுதான். ஆனால் இந்தத தொடர்புகளும் உறவுகளின் வரவுகளும் எம்மண்ணிலே நிரந்தரமாக நீடிக்கப்பட வேண்டுமென்பது தான் எல்லோரினதும் வேணவா.

இத்துடன்,நடைபெற்றுள்ள போட்டிகளின் பரிசளிப்புவிழா யாழ்.இந்துமகளிர் கல்லூரியில் நேற்று 26.07.2003 சனிக்கிழமையும் இன்று 27.07.2003 ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறுகின்றது. இவ்விழாவுக்கு கல்விஅமைச்சில் இருந்து ச.தியாகலிங்கம் அவர்கள் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பிக்கின்றார்கள்.

இம்முறை மாகாண மட்டப்போட்டி நிகழ்வில், நாட்டுக்கூத்து நிகழ்வில் வடமோடி, தென்மோடி, சிந்துநடை, இசைநாடகம், விசேடகூத்து, வயலின், வீணை, புல்லாங்குழல் போன்ற நிகழ்ச்சிகளும் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளன.

* (விசேடமாக கவின்தமிழ் மலரும் வெளியிடப்பட்டது.)

ஆகவே இவ்வாண்டு வடக்கு-கிழக்கு மாகாண தமிழ்மொழித்தின விழாவும் போட்டிகளும் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றதும் சேரமுடியாமல் போய்விடுமோ என கலங்கிய உறவுகள் மீண்டும் சந்தித்ததும் பழகியதும், உறவைப் பகிர்ந்ததும் நிறைவைத் தந்திருக்கின்றதே எல்லாம் தமிழினாலேதானே!

வாழ்க தமிழ்மொழி
வளர்க நம் உறவு

## வறிய மாணவர்களுக்கு உபகரணங்கள்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை மக்கள் வங்கிக்கிளை, நயினாதீவில் உள்ள வறிய மாணவர்களுக்கு இலவசமாக பாடசாலை உபகரணங்களை வழங்கியுள்ளது.

அண்மையில் இடம்பெற்ற நயினாதீவு நாகபூஷணி அம்பாள் ஆலயத்தின் தீர்த்த உற்சவத்தின் போது உற்சவகால காரியாலயத்தில் வைத்து மேற்படி கிளையின் முகாமையாளர் கே.சற்குணபாலன் மாணவர்களுக்கான உபகரணங்களைக் கையளித்தார்.

மேற்படி உதவியினை நயினாதீவு மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த 25மாணவர்கள் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (உ-3,75)

## காணிஅமைச்சின் நடமாடும் சேவை ரத்து

(திருகோணமலை)

திருகோணமலையில் நேற்று இடம்பெறவிருந்த காணிஅமைச்சின் நடமாடும் சேவை ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

மாவட்டச் செயலாளர் பணிமனையில் இடம்பெறவிருந்த இந் நடமாடும்சேவை நேற்று அங்கு அனுஷ்டிக்கப்பட்ட ஹர்த்தால் காரணமாகவே ரத்துச்செய்யப்பட்டுள்ளது. (தி)

## ரயில்சாரதி பலி

(கொழும்பு)

ரயிலுடன் மோதுண்ட ரயில் சாரதி ஸ்தலத்திலேயே பலியாகியுள்ளார். இச்சம்பவம் மாகோ ரயில் நிலையத்தில் நேற்று அதிகாலை 2மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது,நேற்று அதிகாலை தனது கடமையை பொறுப்பேற்க பிரஸ்தாப ரயில்சாரதி சென்று கொண்டிருந்த போது, [illegible]நோக்கி நகர்ந்து சென்ற ரயிலில் அவர் மோதுண்டதால் இச்சம்பவம் நிகழ்ந்துள்ளதென ரயில்நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். (தி)

## சமுர்த்தி வங்கிகள் திறப்பு

(கல்வயல்)

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவில்உள்ள கைதடி, சாவகச்சேரி, கொடிகாமம் ஆகிய இடங்களில் விரைவில் சமுர்த்தி வங்கிகளைத் திறக்கத் துரிதநடவடிககைகள் பிரதேச செயலகத்தினரால் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

சமுர்த்தி வங்கிகளுக்குத் தேவையான தளபாடங்கள்,இரும்புப்பெட்டகங்கள் என்பன சமுர்த்தி அதிகாரசபையால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. சென்றமாத முற்பகுதியில் யாழ். செயலகத்தில் சமுர்த்தி வங்கி உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி வகுப்புகளும் நடைபெற்று முடிந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-36)

## மக்களிடம் தஞ்சமடைந்த கடற்படைச் சிப்பாய் புலிகளால் க.கா.குழுவிடம் ஒப்படைப்பு

(யாழ்ப்பாணம்)

பொதுமக்களிடம் தஞ்சமடைந்த கடற்படைச் சிப்பாய் ஒருவர், விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினரால் நேற்று கண்காணிப்புக் குழுவினரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

கிளாலிப் பகுதியில் கடமையாற்றிவரும் அனுராதபுரம் மாவட்டத்திலுள்ள காடஸ்கஸ்கிலிய என்ற இடத்தைச்சேர்ந்த சோமலதாகே சிறில ராஜபகஷ (வயது 22) என்ற கடற்படைச்சிப்பாய் நேற்று முன்தினம் சாவகச்சேரிப் பகுதிப் பொதுமக்களிடம் சொந்த ஊருக்குச்செல்ல உதவுமாறு கோரி தஞ்சமடைந்திருந்தார்.

நான்கு மாதங்களுக்கு முன்பு, தான் முதலாவதாக கிளாலிப் பகுதிக்குத் கடமைக்கு வந்ததாகவும், வேலைப்பளு மற்றும் மேலதிகாரிகளின் துன்புறுத்தல் தாங்காமல் தப்பிஓடித் தஞ்சம புகுந்திருப்பதாகவும் மேற்படி சிப்பாய் பொது மக்களிடம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை நேற்றையதினம் விடுதலைப் புலிகளால் கடற்பிரிவு கண்காணிப்பாளர் போலிடம் மனித உரிமைகள் யாழ்.அலுவலக இணைப்பாளர் ரூபான் சந்திரசேகர முன்னிலையில் ஒப்படைக்கப்பட்ட மேற்படி கடற்படைச் சிப்பாய், கண்காணிப்புக்குழு அலுவலகத்தில் வைத்து ஊர்காவற்றுறை கடற்படை அதிகாரி ரத்னாயக்காவிடம் நேற்று மாலை ஒப்படைக்கப்பட்டார். (உ-4,7)

## மட்டக்களப்பு தமிழ்க்கட்சி அலுவலகங்களுக்கு விசேட பொலிஸ் பாதுகாப்பு

(கொழும்பு)

மட்டக்களப்பில் உள்ள தமிழ் அரசியல்கட்சி உறுப்பினர்களை அவர்களது அலுவலக வளாகத்திலேயே தங்கிஇருக்குமாறு பொலிஸார் ஆலோசனை வழங்கியுள்ளனர்.

தேவையற்ற வகையில் வெளியே நடமாடவேண்டாம் எனவும், அத்தியாவசிய தேவைகளுக்காக வெளியே செல்லவேண்டி இருப்பின், பொலிஸ் பாதுகாப்புடன் செல்லுமாறும் அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள தமிழ் அரசியல் கட்சி அலுவலகங்களுக்கு பொலிஸ்பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

இம்மாவட்டத்தில் இனந்தெரியாத நபர்களினால் தமிழ்க்கட்சி உறுப்பினர்கள் அண்மைக்காலமாக சுட்டுக்கொல்லப்பட்டு வருவதை அடுத்தே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (தி)

## விடுதலைப் போருக்கு பக்கபலமளிக்காத முஸ்லிம்களுக்கு தனிநிர்வாகம் வழங்குவதா?

### அபத்தமானது என்கிறார் தங்கவடிவேல் எம்.பி.

(யாழ்ப்பாணம்)

தமிழினம் இனவாதிகளால் அடக்கப்பட்டபோது, அவர்களின் விடுதலைக்காகப் பங்களிப்புச் செய்யாத முஸ்லிம்களுக்கு தனி நிர்வாகம் வழங்குவது அபத்தமானது.

நேற்று முன்தினம் யாழ். நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்றலில் தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (ரெலோ) ஏற்பாட்டில் இடம் பெற்ற வெலிக்கடைச் சிறைச்சாலைப் படுகொலைகளின் 20 வது வருட நினைவு அஞ்சலிக்கூட்டத்தில கலந்து கொண்டு உரைநிகழ்த்திய மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் த. தங்கவடிவேல் இவ்வாறு குறிப்பிட்டார்.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம். கே. சிவாஜிலிங்கம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி. இளம்பரிதி, கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களான அ. சந்திரநேரு, என். ரவிராஜ், க. இராஜகுகனேஸ்வரன், செலவம் அடைக்கலநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அங்கு தங்கவடிவேல் எம்.பி மேலும் கூறுகையில்,

கடந்த 20 வருடங்களாக இங்கு இடம்பெற்ற இனப்போர், தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரனின் ஆளுமையாலும், ஆற்றலாலும் இன்று சமாதானமாக உருவெடுத்துள்ளது.

தமிழனைத் தொடர்ந்தும் அடக்கியொடுக்க முடியாது அவன் கேட்பதைக்கொடுப்பதே அரசியலுக்கு ஆரோக்கியமானது என உணரப்படடுள்ள இவ்வேளையில், முஸ்லிமகளின் கோரிக்கை எவராலும் ஏற்றுக கொள்ளப்பட முடியாதது.

பல்லாயிரக்கணக்கான மாவீரர்களின் தியாகத்தின் மேல் உருவாகியுள்ள இந்தச் சமாதானத்தை அரசியல் இலாபத்திற்காக குழப்ப முனைபவர்கள் துரோகிகள்.

சிறுபான்மையினமான முஸ்லிம்களை அடக்கியாளும் எண்ணம் எமக்கு என்றைக்கும் இருந்ததில்லை என்று குறிப்பிட்டார். (உ-4)

## ஊர்காவற்றுறையில் குடிநீர்த் தட்டுப்பாடு

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறையின் பல்வேறு பாகங்களிலும் குடிநீருக்கு பலத்த தட்டுப்பாடு நிலவுவதாக தெரிவிக்கப்படுகிறது.

தற்போது நிலவும் கடுங்கோடை காரணமாக இப்பகுதி நன்னீர் நிலைகள் வற்றிவிட்டதே இதற்குக் காரணமாகும்.

இதனால் எழுவைதீவு, பருத்தியடைப்பு, மெலிஞ்சிமுனை, தம்பாட்டி, நாரந்தனை, சுருவில், புளியங்கூடல் கிராமமக்கள் குடிநீரைப் பெறுவதற்காக பெரிதும் கஷ்டமடைந்து வருகின்றனர்.

இதேவேளை, குடிநீர்த் தட்டுப்பாடு காரணமாக இப்பகுதிக் கால்நடைகள் இறக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (உ-75)

# விளையாட்டுச் செய்திகள்

## 5 ஆயிரம் மீற்றர் ஓட்டத்தில்
## சுஜீவா நில்மினி புதிய சாதனை

(கொழும்பு)

கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கில் நேற்று முன்தினம் ஆரம்பமாகி இடம்பெற்று வரும் இலங்கையின் 81வது தேசிய மெய்வல்லுநர் போட்டிகளில் மகளிருக்கான 5ஆயிரம் மீற்றர் ஓட்டப் போட்டியில், சுஜீவா நில்மினி புதிய சாதனை ஒன்றை நிலைநாட்டியுள்ளார். இவர் இந்தத் தூரத்தை 16:21:18 விநாடிகளில் ஓடிமுடித்து இச் சாதனையை நிலைநாட்டியுள்ளார்.

இதேவேளை, மகளிருக்கான நீளம் பாய்தலில் என்.எஸ்.ஜீ பிரியதர்சினி 5.76மீற்றர் தூரம் பாய்ந்து முதலாம் இடத்தினைப் பெற்றுள்ளார். மகளிர் குண்டெறிதல் போட்டியில் 12.64 மீற்றர் தூரத்திற்கு குண்டையெறிந்த எம்.என்.ரி.முத்துநாயக்க முதலாம் இடத்தையும் ஆடவர் பிரிவில் 69.64மீற்றர் தூரம் ஈட்டியை எறிந்த பிரதீப் நிஷாந்த முதலாம் இடத்தினையும் பெற்றிருக்கின்றனர். (உ-68)

## தென்னாபிரிக்க அணியின் அண்மைய அரிய சாதனை

இங்கிலாந்திற்கு எதிராக இடம்பெற்று வருகின்ற முதலாவது டெஸ்ற் கிரிக்கெற் போட்டியின் முதல் நாள் ஆட்ட முடிவில் தென்னாபிரிக்க, ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களின் அரிய சாதனையால் ஒருவிக்கெற்றை மட்டும் இழந்து 398ஓட்டங்களைப் பெற்று வலுவான நிலையில் உள்ளது.

தென்னாபிரிக்க அணியின் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்களான அணித்தலைவர் ''கிறகம் ஸ்மித்'' மற்றும் ''கேர்சல் கிப்ஸ்'' ஆகியோா ஆரம்ப துடுப்பாட்ட ஜோடியாக 338 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பகிர்ந்து கொண்டனர்.

இதன் மூலம் 'டெஸ்ற்' கிரிக்கெற் வரலாற்றில் ஆரம்பவிக்கெற்றுக்காக 300ற்கும் மேற்பட்ட ஓட்டங்களை இருதடவைகள் பெற்ற ஆரம்ப துடுப்பாட்ட வீரர்கள் ஜோடி என்ற சாதனையை நிலைநாட்டியுள்ளனர்.


இதேவேளை, கிப்ஸ் 179ஓட்டங்களைப் பெற்றவேளை ஆட்மிழந்தார். எனினும், அணித்தலைவர் ஸ்மித் ஆட்டமிழக்காமல் 178 ஒட்டங்களைப்பெற்றிருந்தார். (உ-68)

### கிரிக்கெற் போட்டி

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் குமரகோட்டம் சனசமூக நிலையத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியை முன்னிட்டு நடாத்தப்படும் கிரிக்கெற் போட்டியின் 5வது சுற்று இன்று பி.ப. 3மணிக்கு இடம்பெறவுள்ளது. (உ)

## ஈராக்கில் அமைதிப்படையாக இலங்கைப் படையா...?!




## பொ.ஐ.மு அபிவிருத்தி திட்டங்களை ஐ.தே.மு அரசு இடைநிறுத்தியுள்ளது

### ஜனாதிபதி சந்திரிகா குற்றச்சாட்டு



(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்ட அபிவிருத்தி வேலைத்திட்டங்களை தற்போதைய அரசு இடை நிறுத்தியுள்ளது என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க குற்றம் சாட்டியுள்ளார்.

நேற்று முன்தினம் அக்குகுரசைப்பகுதியில் நடைபெற்ற வெள்ள நிவாரண உதவித்திட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் இக் குற்றச்சாட்டினை விடுத்துள்ளார்.

இந்நிகழ்வில் தொடர்ந்தும் பேசிய அவர், இவ்வேலைத்திட்டங்களுக்குப் போதுமான அளவு நிதி இருக்கின்ற போதிலும் அரசாங்கம் அதனைத் தொடர்நதும் முன்னெடுக்கவில்லை.

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் நாட்டில் புதிய அபிவிருத்தித் திட்டங்களுக்கென ஒதுக்கீடு செய்யும் நிதியினை, இடைநிறுத்தப்பட்ட இத் திட்டங்களுக்காக செலவு செய்தால் மக்கள் பெரும் நன்மை அடைவர்.

பொருளாதார அபிவிருத்தித் திட்டங்கள் எனக் கூறிக் கொண்டு, வீண் செலவுகளை அரசு மேற்கொண்டு வருகிறது.

அண்மையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தங்களுக்கென ஜனாதிபதி நிதியத்தில் இருந்து 88 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது எனவும் ஜனாதிபதி அங்கு சுட்டிக் காட்டியுள்ளார். (தி)

# வடக்கு - கிழக்கு மாகாண தமிழ்த்தின போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில நேற்றும் நேற்று முன்தினமும் இடம்பெற்ற வடக்கு-கிழக்கு மாகாண மட்ட தமிழ் தினப் போட்டிகளின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

முதல் மூன்று இடங்களையும் பெற்றவர்களின் பெயர் விபரங்கள் வருமாறு,

### வாசிப்பு

**பிரிவு - 1**

குஹாஷினி சிவனேசராஜா (மட்டக்களப்பு வின்சன் மகளிர் உயர்தர தேசியப் பாடசாலை), மா.நாகவதனி (யாழ்.தந்தைசெல்வா தொ.நி.பாடசாலை), எச்.றுஸ்தியா (கல்முனை அல்மனார் மகா வித்தியாலயம்).

**பிரிவு - 2**

சதுர்த்திகா யோகநாதன் (மட்டக்களப்பு வின்சன் உயர்தர பாடசாலை), ம.ஜெனிற்றா கிளிநொச்சி தர்மபுரம் மகாவித்தியாலயம். கே.நிவேகா (மன்னார் இலுப்பைக்கடவை அ.த.க பாடசாலை), க.பிரியங்கா திருகோணமலை புனித மரியாள் கல்லூரி).

### ஆக்கத்திறன்

**பிரிவு - 1**

யோ.ஜனனி (வவுனியா கூமாங்குளம் சித்திவித்தியாலயம்), எம்.எச்.சன்பறா (கல்முனை, அல்-ஹிலால் வித்தியாலயம்), த.தக்சனா (திருகோணமலை, புனித பிரான்சிஸ் சவேரியர் மகாவித்தியாலம்).

### பேச்சு

**பிரிவு - 1**

ஜெ.ஜெயமாருதி, (கிளிநொச்சி இராமநாதபுரம் மகாவித்தியாலயம்), சானுஜா சிதம்பரமூர்த்தி (மட்டக்களப்பு வின்சன் மகளிர் உயர்தர தேசியப்பாடசாலை), ம.கரோலின் சேரா (யாழ்.சென்ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்).

**பிரிவு - 2**

ம.வைதேகி (திருகோணமலை, புனிதமரியாள் கல்லூரி), ஆர்.எவ்.றிபா (மன்னார் அல்-அஸ்கர் மகா வித்தியாலயம்), வை.சுமித்திரா (கிளிநொச்சி புதுமுறிப்பு விக்னேஸ்வரா வித்தியாலயம்)

**பிரிவு - 3**

வி.விஜயதர்சிகா (மன்னார் சித்திவிநாயகர் இந்துக்கல்லூரி), கிருத்திகா கணேசலிங்கம் (மட்டக்களப்பு வின்சன் மகளிர் உயர்தரப் பாடசாலை), சி.அபிராமி (திருகோணமலை, புனிதமரியாள் கல்லூரி), தெ.துர்க்காஜினி (வவுனியா புதுக்குளம் மகாவித்தியாலயம்)

**பிரிவு - 4**

துரையப்பா கிரோஜன் (மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரி), சிகஜேந்தினி (யாழ்.வடஇந்து மகளிர் கல்லூரி), எம்.எம்.பாத்திமா நஸீஹா (கல்முறை ஆயிஷா பா.ம.வித்தியாலயம்).

**பிரிவு - 5**

ம.ஜெறோம்(முல்லைத்தீவு மகா வித்தியாலயம்), வி.வினுஜா (திருகோணமலை புனித மரியாள் கல்லூரி), எம்.ஐ.எம்.றிஸ்னி (கல்முனை, அல்-அஷ்ரக் ம.வித்தியாலயம்).

### பாவோதல்

**பிரிவு - 1**

ஏ.ஜி.எவ்.சம்ஹறா (கல்முனை அல் - மனார் வித்தியாலயம்), கி.கோகுலரமணன் (வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயம்), இ.றுக்சிக்கா (திருகோணமலை ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி).

**பிரிவு - 2**

ம.துளசி (யாழ்.வட்டு யாழ்ப்பாணக் கல்லூரி), மா.ஷயுக்ஷனி (திருகோணமலை ஸ்ரீ சண்முகாஇந்து மகளிர் கல்லூரி), பா.சுகிர்தா (மன்னார் சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி)

**பிரிவு - 3**

தர்மினி எதிர்மன்னசிங்கம் (மட்டக்களப்பு வின்சர் மகளிர் உயர்தரப் பாடசாலை), ஆரம்யா (கிளிநொச்சி கனகாம்பிகைக்குளம் மகாவித்தியாலயம்), பு.அமிர்தன் (திருகோணமலை ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி).

**பிரிவு - 4**

சி.கஜானி (மன்னார் புனித சவேரியார் பெண்கள் பாடசாலை), பே.புஷ்பனா (யாழ்.மகாஜனாக்கல்லூரி), ச.யயந்தன் (திருகோணமலை இ.கி.ச.ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி)

**பிரிவு - 5**

தெ.தஷிகா (யாழ்.சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), பாலசிங்கம் கிஸ்ணவேணி (மட்டக்களப்பு தேத்தாத்தீவு மகாவித்தியாலயம்), கே.ரஸ்மிலா (கல்முனை அல்-மனார் ம.கல்லூரி), மெ.லிசாந்தினி (வவுனியா சைவப் பிரகாச மகளிர் கல்லூரி)

### இசை

**பிரிவு - 1**

தர்ணிஷா ஷியாம்சுந்தர் (மட்டக்களப்பு வின்சன் மகளிர் உயர்தரப் பாடசாலை), செ. றெஜிமோகன் (வவுனியா பூந்தோட்டம் அ.த.க பாடசாலை), சி. கீர்த்திகா (திருகோணமலை ஸ்ரீ சண்முகா வடஇந்து மகளிர் கல்லூரி)

### இசை (தனி)

**பிரிவு - 2**

ச.சங்கீதா (யாழ்.மானிப்பாய் மகளிர் கல்லூரி), த.தர்ஷாந் (திருகோணமலை புனித சூசையப்பர் கல்லூரி), கு.ரா.ஸ்ரெல் ஜெபசாந் (மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரி).

**பிரிவு - 3**

ர.சுரசாகிததியன் (யாழ்.சென்ஜோன்ஸ கல்லூரி) க.சிந்தூரி (திருகோணமலை உவர்மலை விவேகானந்தாக் கல்லூரி), கருணாநிதி தனஞ்ஜெயன் (மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரி).

**பிரிவு - 4**

ஸ்ரீ.சிவஞ்சினி (திருகோணமலை ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி), ஜெ.வைஷ்ணவி (யாழ். மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப்பாடசாலை), கை. குலரூபா (வவுனியா சைவப் பிரகாச மகளிர் கல்லூரி).

**பிரிவு - 5**

ம.தயாபரன் (யாழ்மத்திய கல்லூரி), ப.யசிந்தரன் (வவுனியா விபுலானந்தா மகாவித்தியாலயம்), கி.சற்குருவேணு (மன்னார் பெரிய பண்டிவிரிச்சான் அ.த.க.பாடசாலை).

### இசை (குழு -I)

மட்டக்களப்பு புனித மைக்கேல் கல்லூரி, கல்முனை அக்கரைப்பற்று சிராஜ் வித்தியாலயம், வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயம்.

### இசை (குழு - II)

யாழ்.சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம், திருகோணமலை சண்முகா இந்து மகளிர் கல்லூரி, முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயம்.

### நடனம் (தனி)

**பிரிவு - 1**

கு.நாரணி (மட்டக்களப்பு கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலயம்), மா.மாதுரி (வவுனியா தமிழ்மத்திய மகாவித்தியாலயம்), பா.ஜஸ்திகா (யாழ். ஏழாலை சைவசன்மார்க்க வித்தியாலயம்).

**பிரிவு - 2**

தே.விதுர்ஷன் (யாழ்.கொக்குவில் இந்துக் கல்லூரி), கி.பிரதீகா (வவுனியா இறம்பைக்குளம் ம.ம.வி), ச. நாகதாசினி (மன்னர் சித்திவிநாயகர் இந்துக்கல்லூரி).

**பிரிவு - 3**

ர.மதுமதி (மட்டக்களப்பு புனித சிசிலியா பெண்கள் பாடசாலை), பா.அனுசன் (யாழ்.பெரியபுலம் மகா வித்தியாலயம்), பி.பிறேமசிறீதரன் (வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலம்).

**பிரிவு - 4**

கு.மயூரி (யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி), வி.திவ்வியா (கிளிநொச்சி புனித திரேசா பெண்கள் கல்லூரி), சி.சுகாநந்தி (வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம்).

**பிரிவு - 5**

எலிசபேத் சுபத்திரா (யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி), பெ.பேபிசர்மிளா (திருகோணமலை மெதடிஸ்த பெண்கள் கல்லூரி), ஜெ.கயல்விழி (மன்னார் சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி).

### நடனம் (குழு - I)

மன்னார் சித்திவிநாயகர் இந்துக்கல்லூரி, திருகோணமலை மெதடிஸ்த பெண்கள் கல்லூரி, மட்டக்களப்பு புனித சிசிலிய பெ.தே. பாடசாலை.

### நாட்டிய நாடகம் (திறந்த போட்டி)

யாழ்.இராமநாதன் கல்லூரி, மன்னார் சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி, வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி.

### நாடகம் (திறந்தபோட்டி)

புதுக்குடியிருப்பு மகா வித்தியாலயம், யாழ்.சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி, ஏறாவூர் தமிழ் மகா வித்தியாலயம்.

### வில்லுப்பாட்டு (திறந்தபோட்டி)

யாழ்.யாழ்ப்பாணக் கல்லூரி, திருகோணமலை ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி, மட்டக்களப்பு தேத்தாத்தீவு மகாவித்தியாலயம்.

(2ம் பக்கம் பார்க்க)

# சர்வதேச தொழில் ஸ்தாபனம் இராணுவத்தினரின் புனரமைப்பிற்கு ஒரு மில்லியன் அமெரிக்க டொலர்

## அமைச்சர் ஜயலத் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு-கிழக்குப் பகுதிகளில் புதைக்கப்பட்டுள்ள நிலக்கண்ணி வெடிகள் அகற்றப்படாமையினாலேயே, அப்பகுதிகளில் மக்களை மீளக் குடியமர்த்த முடியாதுள்ளது என புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தனா தெரிவித்துள்ளார்.

நேற்றுக் காலை செய்தி நிறுவனம் ஒன்றிற்கு அளித்த பேட்டியிலேயே ஜயலத் இதனைத் தெரிவித்துள்ளார்.

அச் செய்தி நிறுவனத்திற்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர்,

வடக்கு-கிழக்கில இருந்து இடம் பெயர்ந்த மக்கள் இன்னமும் 247 நலன்புரி முகாம்களில் வாழ்ந்து வருகின்றனர்.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட இப்பிரதேசங்கள் பல சர்வதேச நிதி உதவிகளின்மூலம் புனரமைக்கப்பட்டும், அபிவிருத்தி செய்யப்பட்டும் வருகின்றன.

இராணுவத்தினரின் புனர்வாழ்வுக்கென சர்வதேச தொழில் ஸ்தாபனம் ஒரு மில்லியன் அமெரிக்க டொலரை வழங்க முன்வந்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதி உதவிமூலம் வடக்கு-கிழக்குப் பகுதிகளில் உள்ள 55 பாடசாலைகள் புனரமைக்கப்பட்டுள்ளன எனவும் தெரிவித்துள்ளார். (தி)

## மோசடியாக வாகனம் விற்ற கும்பல் பிடிபட்டது

(கொழும்பு)

வாகனங்களை வாடகை அடிப்படையில் பெற்று, பின்னர் போலி ஆவணங்களைப் பயன்படுத்தி அவற்றை விற்றுவந்த மோசடி கும்பலொன்றை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நேற்று முன்தினம் பொறளைப் பகுதியில் உள்ள வீடொன்றைச் சுற்றிவளைத்து சோதனை மேற்கொண்ட பொலிஸார் அங்கிருந்து போலி ஆவணங்களைப் பயன்படுத்தி விற்பனை செய்யப்பட்ட 7 வாகனங்களை மீட்டுள்ளனர்.

அத்துடன், இச்சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எனக் கருதப்படும் 6 சந்தேக நபர்களையும் பொலிஸார் கைது செய்துள்ளதுடன், வாகனங்களை விற்பனை செய்வதற்கு பயன்படுத்தப்பட்ட போலி ஆவணங்களையும் கைப்பற்றியுள்ளனர். (உ-10)

## இந்திய அகதி முகாம்களில் பிறந்த பிள்ளைகளின் பிறப்பை பதிவு செய்ய நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

இந்திய அகதி முகாம்களில் பிறந்த பிள்ளைகளின் பிறப்பை இலங்கைச் சட்டதிட்டங்களுக்கமைய உரியவாறு பதிவு செய்தல் வேண்டும் என்பதால், இந்தியாவில் இருந்து இலங்கை திரும்புவோர் இந்தியாவில் பிறந்த தங்கள் பிள்ளைகளின் பிறப்பை உரியவாறு இலங்கையில் பதிவு செய்ய யாழ். மேலதிக மாவட்ட பதிவாளரும் காணிப் பதிவாளருமான சதாசிவ ஐயர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

* பெற்றோர் விவாகச் சான்று அல்லது அதனை உறுதிப்படுத்தும் ஆவணம்

* பெற்றோரின் பிறப்புச் சான்றிதழ்கள்

* பிள்ளைகள் பட்டியல்

* பிள்ளை வெளிநாட்டில் பிறந்ததென்பதை உறுதிப்படுத்தும் அந்நாட்டில் வழங்கப்பட்ட சான்றிதழ்

* பிள்ளை பிறந்தபோது பெற்றோர் இலங்கைப் பிரஜையாக இருந்தனர் என்பதை உறுதிப்படுத்தும் சான்றிதழ் (முகாம்பதிவு அட்டை)

* பெற்றோரின் இலங்கைக் கடவுச் சீட்டின் பிரதி (இருப்பின்)

* பெற்றோர் அகதிகளாக இந்தியா சென்று வந்திருப்பின் அதனை உறுதிப்படுத்தும் ஆவணம

* பெற்றோர் தற்போது வதியும் பிரிவில் கிராமசேவை அலுவலரின் கடிதம் ஆகிய ஆவணங்களுடன் மேற்படி பதிவிற்கான விண்ணப்பத்தை சம்பந்தப்பட்ட பிரதேச செயலகங்களில் பெற்று பூர்த்தி செய்து ஒப்படைக்குமாறும்,

பிரதேச செயலரால் பெறப்படும் விண்ணப்பம் பதிவாளர் நாயகத்தின் ஊடாக வெளிநாட்டு அமைச்சின் ஊடாக, சென்னை அல்லது திருச்சியிலுள்ள இலங்கை உயர் ஸ்தானிகர் ஆலயத்திற்கு அனுப்பப்பட்டு பதிவு செய்ய ஆவன செய்யப்படும் எனவும் பதிவாளர் மேலும் அறிவித்துள்ளார். (உ)

## இலங்கை இராணுவத்தில் ஆளணிப் பற்றாக்குறை

(கொழும்பு)

இலங்கைப் படையில் நிலவும் ஆளணிப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் வகையில் மேலும் 5 ஆயிரம் பேரை இணைத்துக் கொள்ளும் நடவடிக்கை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதல் நாடு முழுவதிலும் மேற்கொள்ளப்படவுள்ளதாக, படைத்துறைத் தலைமையகத்தைச் சேர்ந்த உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதுபற்றி அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

நாட்டில் தற்போது 17 ஆயிரம் படையினருக்குப் பற்றாக்குறை நிலவி வருகின்றது. இப்பற்றாக் குறையினை நிவர்த்தி செய்யும் முதல் கட்ட நடவடிக்கையாக நாடு பூராகவும் 5 ஆயிரம் பேரை இணைத்துக்கொள்ள பாதுகாப்பு அமைச்சு முடிவு செய்துள்ளது.

இவ் ஆட்சேர்ப்பு நடவடிக்கை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி முதல் மேற்கொள்ளப்படவுள்ளது என்றார். (உ-10)

## 7200 மாணவர்களுக்கு மகாபொல புலமைப்பரிசில்

(கொழும்பு)

பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவு செய்யப்படும் மாணவர்களில் 7 ஆயிரத்து 200 பேருக்கு மகாபொல புலமைப்பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

எதிர்வரும் கல்வியாண்டில் 12 ஆயிரத்திற்கும் அதிகமான மாணவர்கள் பல்கலைக்கழகங்களில் அனுமதிக்கப்படவுள்ளனர்.

இதேவேளை, உயர் கல்வி நிறுவனங்களில் கல்வி கற்க அனுமதி பெற்றுள்ள போதிலும் ஆயிரம் மாணவர்களுக்கு மகாபொல புலமைப்பரிசில் வழங்கப்படுமென புலமைப்பரிசில் நிதியத்தின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். (தி)

### சத்துணவு வழங்கல்

(கொடிகாமம்)

உள்ளூராட்சி வாரத்தையொட்டி சாவகச்சேரி பிரதேச சபையில் கச்சாய் உப அலுவலகப் பொது நூல் நிலைய மண்டபத்தில் கடந்த புதன்கிழமை சத்துணவு வழங்கலும், நூலகக் கண்காட்சியும் சபையின் செயலாளர் கு.ந.பாலச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது.

இவ்விழாவின் பிரதம விருந்தினராக யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி.வி.கிருஷ்ணசாமி கலந்துகொண்டார். (உ-40)

### மண் அகழ்வு அனுமதி குறித்த கூட்டம்

(கல்வயல்)

மண் பெற அனுமதி வழங்குவது தொடர்பான முக்கிய தீர்மானங்களை எடுக்கும் வகையிலான கூட்டமொன்று எதிர்வரும் 29ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணிக்கு தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில், பிரதேச செயலர் எஸ்.ஸ்ரீநிவாசன்தலைமையில் இடம்பெறவுள்ளது.

இக்கூட்டத்தில் சூழல் பாதுகாப்புக் குழுக்கள், சம்பந்தப்பட்ட பகுதிக் கிராம அலுவலர்கள், சமூக நலன் பேணும் அமைப்புக்கள் என்பவற்றின் பிரதிநிதிகள் அழைக்கப்பட்டுள்ளனர். (உ-36)

### புலமைச் சொத்து சட்டமூலம் நிறைவேற்றம்

(கொழும்பு)

புலமைச்சொத்து சட்டமூலம் சில திருத்தங்களுடன் நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

இச்சட்டமூலத்திற்கு ஆதரவாக 99 வாக்குகளும் எதிராக 59 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

பொதுஜன ஐக்கிய முன்னணி மற்றும் மக்கள் விடுதலை முன்னணிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் இச்சட்டமூலத்திற்கு எதிராக வாக்களித்தனர்.

இச்சட்டமூலம் 4 தடவைகள் பாராளுமன்றத்தில் விவாதத்திற்காக விடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (தி)

### கூட்டம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைப் பிரதேச சபை ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் எதிர்வரும் 29ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணிக்கு ஊர்காவற்றுறைப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ்.செல்வநாயகம் தலைமையில் இடம்பெறவுள்ளது. (உ-75)


### பஸ் மறித்துக் கொள்ளையடிப்பு

(கொழும்பு)

கொழும்பிலிருந்து மன்னார் நோக்கிச் சென்றுகொண்டிருந்த பஸ் வண்டி ஒன்று நேற்று அதிகாலை இனந்தெரியாத நபர்களினால் இடைநிறுத்தப்பட்டு கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

கூரிய ஆயுதங்கள் சகிதம் வந்த 3 கொள்ளையர்கள் இவ் பஸ்ஸை இடைமறித்து பயணிகளிடம் இருந்த பணம் மற்றும் நகைகளைக் கொள்ளையிட்டுள்ளனர்.


மேற்படி பஸ்ஸில் இருந்த 52 பயணிகளிடமும் கொள்ளையடித்துக் கொண்டு இந்நபர்கள் தப்பிச் சென்றுவிட்டதாக நொச்சியாகம பொலிஸார் தெரிவித்துள்ளனர். (தி)




நயினாதீவு சனசமூக நிலைய வருடாந்த சமய அறிவுப் பரீட்சையின் பரிசளிப்பு விழா ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலய அரங்கில் நடைபெற்ற போது, பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட இந்து சமய அலுவல்கள் அமைச்சின் மேலதிகச் செயலாளர் ப.க.பரமலிங்கம் அவர்களுக்கு நிலையத் தலைவரும் அஞ்சலதிபருமான நா.க.குமாரசூரியர் J.P மலர் மாலை அணிவிப்பதைப் படத்தில் காணலாம்.



இந்து சமய அமைச்சின் ஏற்பாட்டில் இன்பசிட்டி இந்து இளைஞர் மன்றத்தால் நடாத்தப்பட்ட பௌர்ணமி விழாவின் போது இடம்பெற்ற கலைநிகழ்வின் ஒரு காட்சி. படம்: வே நவச்செல்வம்



மக்கள் வங்கிகளின் 42வது ஆண்டு நிறைவை முன்னிட்டு, மக்கள் வங்கி பிரதானவீதி கிளை முகாமையாளர் சு.தங்கலிங்கம் மாணவர் மலர்ச்சிக் கணக்கொன்றை சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி ஒருவருக்கு மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தபோது எடுக்கப்பட்ட படம்.



சரசாலை இந்து மன்றம் நடத்திய பேச்சுப்போட்டி பரிசளிப்பு வைபவத்திற்கு தலைமைதாங்கிய சரசாலை சிதம்பர விநாயகர் ஆலய பரிபாலனசபைத் தலைவர் க.சிவசங்கரநாதன் உரையாற்றுவதையும், ஆலய பிரதம குரு சிவ ஸ்ரீ. சு.நடராஜா குருக்கள் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம்.



கரவெட்டி ஜங்கரன் சனசமூக நிலைய ஸ்தாபகர் எஸ்.ஸ்கந்தா, மேற்படி சனசமூக நிலையத்தின் சார்பாக இளைப்பாறிய தபாலதிபர் எஸ்.வீரசிங்கத்தினால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்படுகின்றார். படம்: பரு.நிருபர்

# பாகிஸ்தான் சிறைக்கைதிகள் ஆயுதங்களுடன் ஆர்ப்பாட்டம்

(இஸ்லாமபாத்)


சிறையிலிருந்து தப்பிச்செல்ல தங்களை அனுமதிக்க வேண்டும் என்று கோரி பாகிஸ்தான் 'சியோல் கோட்' நகர சிறைக் கைதிகள் நேற்று முன்தினம் முதல் கலவரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இவர்கள் சிறையிலிருந்த 50 பெண் கைதிகளையும், கைதிகளைப் பார்வையிடச் சென்ற 9 நீதிபதிகளையும் தமது துப்பாக்கி முனையில் மிரட்டி சிறைப்பிடித்து தங்களை பத்திரமாக வெளியேற அனுமதித்தால் உங்களை விடுதலை செய்வோம் எனக் கூறியுள்ளனர்.

இவர்களை அடக்க அங்கிருந்த பொலிஸார் முயன்றசமயம் தம்மிடமிருந்த துப்பாக்கிகளால் கலவரத்தில் ஈடுபட்ட கைதிகள் பொலிஸாரைச் சுட்டுக் காயப்படுத்தியுள்ளனர்.

அத்துடன் தமக்கு 74 பேர் உட்கார்ந்து செல்லக்கூடிய பெரிய பேருந்தும், கலாஷ்னிகோவ் ரக துப்பாக்கிகளும் பெற்றுத் தரவேண்டும் என்றும் கோரியுள்ளனர்.

இதேவேளை, இவர்களிடம் துப்பாக்கிகள் எப்படி வந்தன, இக்கலவரத்தில் ஈடுபட்ட கைதிகளின் பின்னணி நோக்கம் என்னவென்பது குறித்துத் தமக்குத் தெரியவில்லை என்று சம்பந்தப்பட்ட சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (உ-2)



கியூபா நாட்டு ஊடுருவல்காரர்கள் 12 பேர் அமெரிக்காவின் கடற் பகுதியில் ஊடுருவ முயன்றனர். ஆனால் அமெரிக்கப் படையினரின் பார்வையில் சிக்கியதனால் மீண்டும் தம் நாடு நோக்கிச் சென்ற காட்சி. படகில் ட்ரக் ஒன்றையும் ஏற்றிவந்தமை குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்காவில் 789 குழந்தைகள் மீது பாலியல் கொடுமை

(நியூயோர்க்)

அமெரிக்க நகரமான பாஸ்டனிலுள்ள ஆர்ச் டயோஸிஸ் தேவாலயத்தைச் சேர்ந்த 250 பாதிரியார்களும் ஊழியர்களும் 789 குழந்தைகளைப் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கிய விபரம் தெரியவந்துள்ளது.

1940 முதல் இத் தேவாலய செயல்பாடுகள் குறித்து விசாரணை நடத்திய மாசாசூசெட்ஸ் நகர அட்டார்னி ஜெனரல் தாமஸ் எ:ப் ரெய்லி, பாலியல் வன்முறை குறித்த அறிக்கையை புதன்கிழமை வெளியிட்டார்.

பல காலமாக இக்கொடுமை நடந்து வந்துள்ளதாகக் கூறும் அவர், இது குறித்து விசாரணை நடத்துவதற்கு பதிலாக சம்பந்தப்பட்டவர்களை டயோஸிஸ் பாதுகாத்து வந்திருப்பதாகவும் கூறியுள்ளார்.

விசாரணை அறிக்கையை கவனமாக ஆராய்ந்த பின் ஆர்ச் டயோஸிஸ் கருத்து தெரிவிக்கும் என தேவாலய செய்தித் தொடர்பாளர் கிறிஸ்டோபர் காய்ன் தெரிவித்தார். (பி)

# அமெரிக்கப் படைகள் லைபீரியா விரைவு

(மன்ரோவியா)

லைபீரியாவின் தலைநகர் மன்ரோவியாவிற்கு தமது படைகளை அனுப்ப அமெரிக்கா முடிவு செய்துள்ளது.

இப்படைகள் இன்னும் 10 தினங்களுக்குள் அனுப்பிவைக்கப்படுவார்கள் என்று அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யு புஷ் கூறியுள்ளார்.

புஷ்ஷின் இந்த முடிவு வெளியாகியதையடுத்து லைபீரியாவில் யுத்த நிறுத்த அறிவிப்பு ஒன்றை அந்நாட்டு அரச படைகள் விடுத்துள்ளன.

எனினும், இந்த அறிவிப்பைக் கருத்தில் கொள்ளாது லைபீரியத் தலைநகர் மன்ரோவியாவை தமது கைக்குள் கொண்டு வருவதற்காக பிரிவினைவாத போராளிக்குழு தொடர்ந்தும் தாக்குதலை மேற்கொண்டு வருகின்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனிடையே, இவர்களின் தாக்குதல்களுக்குள் சிக்கி பலத்த கஷ்டங்களை அங்குள்ள மக்கள் எதிர்கொண்டுவரும் வேளையில், அங்கு தண்ணீர்ப் பஞ்சம் தலைதூக்கியுள்ளது.

இதனால் அங்குள்ள மக்களுக்கு குடிநீர் உதவியை வழங்க பொது நிறுவனங்களை முன்வருமாறு ஏனைய உதவி வழங்கும் நிறுவனங்கள் கேட்டுக்கொண்டுள்ளன. (உ-9)

# இந்திய, பாக். பிரதமர்கள் விரைவில் சந்திக்க வாய்ப்பு

(இஸ்லாமபாத்)

இந்தியப் பிரதமர் அடல்பிஹாரி வாஜ்பாயை இந்த ஆண்டு இறுதிக்குள் சந்தித்துப் பேச பாகிஸ்தான் பிரதமர் ஜவருலால் கான் ஜமாலி திட்டமிட்டுள்ளார்.



'திநேஷன்' பத்திரிகைக்கு அளித்த பேட்டியொன்றின் போது ஜமாலி இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் பேட்டியளிக்கையில்,

இந்தியாவிற்குச் செல்வதில் எனக்கு எவ்வித தயக்கமும் இல்லை. உலகின் எந்த இடத்திலும் வாஜ்பாயை சந்தித்துப் பேச தயாராக உள்ளேன் என்று கூறினார்.

இதேவேளை, நியூயோர்க்கில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் கூட்டம் செப்ரெம்பர் மாத முற்பகுதியில் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில் இந்தியாவும், பாகிஸ்தானும் கலந்துகொள்ளவிருப்பதால் அங்கு இவ்விரு நாட்டுப் பிரதமர்களும் சந்தித்துப் பேசும் வாய்ப்பு அதிகமாக இருப்பதாக அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர். (உ-2)



உலக தரிசனம்

# அருணாசலப் பிரதேசம் குறித்து இந்தியா உறுதியான நிலைப்பாடு

(புதுடில்லி)

அருணாசலப் பிரதேசம் இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதியே என்று இந்தியா உறுதிபடக் கூறியுள்ளது.

அருணாசலப் பிரதேசத்தை இந்தியாவின் ஒரு பகுதியாக நாங்கள் அங்கீகரிக்கவில்லை என்று சீன வெளியுறவுத்துறை அமைச்சர் கோங்குவான், தலைநகர் பெய்ஜிங்கில் நேற்று முன்தினம் கூறியிருந்தார்.

இது விடயம் குறித்து செய்தியாளர் எழுப்பிய கேள்விகளுக்கு வெளியுறவு அமைச்சு செய்தித் தொடர்பாளர் நேற்றுப் பதிலளிக்கையில் அருணாசலப் பிரதேசம் இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதியே என்று கூறினார். இதனிடையே சீனத் துருப்புக்கள் அருணாசலப் பிரதேசத்தின் கட்டுப்பாட்டு எல்லைக்கோட்டைத் தாண்டி வந்துள்ளனர் என்று இந்தியா முன்வைத்த குற்றச்சாட்டை சீனா முற்றுமுழுதாக மறுத்துள்ளது.

இந்தியப் படையினரே சீனாவின் எல்லைக்கோட்டைத் தாண்டி வந்துள்ளனர் என்று சீனா குற்றம் சாட்டியுள்ளது.

இதனையடுத்து சீனாவிற்கும் இந்தியாவிற்குமிடையே இது விடயம் குறித்த கருத்து வேறுபாடுகள் அதிகரித்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. (உ-2)

# சூரிய சக்தியால் இயங்கும் விமானம் கூட்டுத் தயாரிப்பிற்கு இந்தியாவை யு.எஸ். நிறுவனம் அழைக்கிறது

(வாஷிங்டன்)

சூரிய சக்தியால் இயங்கும் ஆளில்லாத விமானங்கள் தயாரிப்பில் பங்கேற்குமாறு இந்திய நிறுவனங்களுக்கு அமெரிக்க நிறுவனம் ஸ்டார்காம் இன்டர்நஷனல் அழைப்பு விடுத்துள்ளது.

புளோரிடாவில் உள்ள இந்த நிறுவனத்தின் தலைவர் ஜேம்ஸ் அப்ரஹம்சன் இந்த அழைப்பை விடுத்துள்ளார். விமானக் கட்டுமானம் மற்றும் தொழிநுட்பப் பணியில் கூட்டாளிகளைச் சேர்த்துக்கொள்ள ஆர்வமாக உள்ளோம் என்றும் அவர் சொன்னார்.

'உயரத்துக்குத் தக்கவாறு வெப்பநிலை மாறாத பகுதியில் பறக்கும் ஆற்றலைக் கொண்டதாக இந்த விமானம் இருக்கும். 19 ஆயிரத்து 700 மீற்றர் உயரத்திற்கு பறக்கக்கூடியதாகவும் ஆயிரத்து 180 கிலோ வரை சுமையைக் கொண்டுசெல்லக்கூடியதாகவும் இருக்கும்' என்றார் அப்ரஹம்சன். (பி)

## பொலிஸாரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் 8 பேர் பலி

(சென்னை)

இந்தியாவின் அஸாம் மாநிலத்தில் ஆர்ப்பாட்டம் நடத்திய பொதுமக்கள் மீது பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் 8 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

இவர்கள் மேலதிக உரிமைகளைக் கோரி நடத்திய ஆர்ப்பாட்டத்தைத் தடுத்து நிறுத்த பொலிஸார் முயன்ற சமயமே இச்சம்பவம் நிகழ்ந்துள்ளது.


இதன்போது பல பொதுமக்கள் துப்பாக்கிச்சூட்டுக் காயங்களுக்குள்ளாகி வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (உ-2)

## ஜப்பானில் பூமியதிர்ச்சி

(டோக்கியோ)

ஜப்பானின் வடகிழக்குப் பகுதியில் நேற்று அதிகாலை பாரிய பூமியதிர்ச்சி ஏற்பட்டது. இதில் 200 பேரிற்கும் அதிகமானோர் காயமடைந்தனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இப்பூமியதிர்ச்சி ஏற்படுவதற்கு சில மணி நேரங்களுக்கு முன்னரும் இப்பகுதியில் பூமியதிர்ச்சி ஏற்பட்ட போதிலும், இப்பூமி அதிர்ச்சியே அதி களவு தாக்கத்தை கொண்டதாக காணப்பட்டது என்று ஜப்பானின் என்.எஸ்.கே. ஒலிபரப்பு நிறுவனம் தெரிவித்துள்ளது. (உ-2)



அமெரிக்கா நடத்திய தாக்குதலின்போது வெடிகுண்டுச் சத்தங்களும் அதனால் ஏற்படும் தீப்பிழம்புகளின் தாக்கமும் இன்னமும் ஈராக்கை விட்டு அகலவில்லை. போரின் ஓலம் அடங்காத ஈராக்கின் காலை வேளையில் எடுக்கப்பட்ட ரம்மியமான காட்சி.

# அமெரிக்கக் கடற்படைச் செயலாளர் தற்கொலை

(வாஷிங்டன்)

அமெரிக்கக் கடற்படைச் செயலாளர் கொலின் மக்மிலன் தற்கொலை செய்துகொண்டுள்ளார்.

67 வயதான மக்மிலன் நேற்று முன்தினம் தனது தலையில் தானே துப்பாக்கியால் சுட்டுத் தற்கொலை செய்துகொண்டுள்ளார்.

இவர் அண்மைக் காலமாகப் புற்றுநோயினால் பாதிக்கப்பட்டிருந்தார் என்று அவரது குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யு புஷ்ஷினால் பிரேரிக்கப்பட்ட கடற்படைச் செயலாளராக நியமிக்கப்பட்ட மக்மிலன் தனது சேவையை திறம்படவே மேற்கொண்டு வந்தார் எனவும் இவரது தற்கொலை தங்களுக்கு பெரும் கவலை அளிப்பதாகவும் அமெரிக்கக் கடற்படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

எனினும் இவரது தற்கொலைக்கான காரணம் குறித்து கடற்படை வட்டாரங்கள் கருத்து எதனையும் கூறவில்லை. (உ-2)

இந்தியா-பாக். எல்லையான கார்கிலில் நடைபெற்ற யுத்தத்தில் உயிரிழந்தவர்களின் நினைவுநாள் நேற்று முன்தினம் புதுடில்லியில் அனுஷ்டிக்கப்பட்டது. போரில் உயிரிழந்த ஒருவருக்கு அவரது மனைவியும், குழந்தையும் மெழுகுவர்த்தி ஏற்றி அஞ்சலி செலுத்தினர்.



ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை
கடைமுறை தான்சாந் துயரம் தரும்
- குறள்

# வலம்புரி

## சமாதான சூழலுக்கு உதவுக

அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையே ஏற்பட்டுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கை சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான ஓர் அடித்தளம். இதனை சரியான முறையில் சகல தரப்பினரும் பேணுவதன் மூலமே சமாதான இலக்கை அடைந்துகொள்ள முடியும். புரிந்துணர்வு உடன்படிக்கையில் உடைவுகளும், கீறல்களும் ஏற்படுமாக இருந்தால் அதன் விளைவு சமாதானத்தைப் பாதிப்பதாக அமையும். எனவே, இது விடயத்தில் இரு தரப்பினரும் மிகவும் விழிப்பாக இருந்து புரிந்துணர்வு ஒப்பந்தத்தைப் பாதுகாப்பது தலையாய கடமையாகும். ஆனால், கடந்த காலத்தில் யாழ். குடாநாட்டில் படையினர் நடந்துகொள்ளும் முறைகள் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மீறுவதாக அமைந்துள்ளது.

குறிப்பாக கடந்த 23ஆம் திகதி திருநெல்வேலிப் பகுதியில் விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஓர் நினைவுச் சின்னமாக லெப். கேணல் செல்லக்கிளி அம்மானின் சிலையைத் திறப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. ஆனால், சிலை திறப்புக்கு முன்னதாக அவ்விடத்திற்கு வந்த இராணுவத்தினர் சிலை திறப்பதைத் தடுக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டனர். தமிழர் தாயகத்தில் தமிழ் மக்கள் தமது விருப்புக்குரிய ஒரு போராளியின் தூபியைத் திறந்து வைப்பது இலங்கையின் இறைமைக்கோ அல்லது அதன் ஒற்றையாட்சிக்கோ எவ்வகையிலும் ஊறு விளைவிப்பதல்ல. தாம் விரும்பிய ஒருவரின் நினைவுத் தூபியைத் திரைநீக்கம் செய்து அவரை நினைவில் நிறுத்துவது இந்த நாட்டைச் சேர்ந்த சாதாரண ஓர் பிரஜைக்கு இருக்கக்கூடிய அடிப்படை உரிமையாகும்.

ஆனால், இலங்கை இராணுவத்திற்கு அந் நிகழ்வு ஏற்புடையதாக இருக்கவில்லை. எப்படியாவது அதனைத் தடுத்துவிடவேண்டும் என்பது அவர்களின் இலக்காக இருந்தது.

இந்நடவடிக்கையில் இராணுவச் சிப்பாய்கள் ஈடுபட்டாலும், அதற்கான கட்டளையைப் பிறப்பித்தவர் இராணுவ உயர் அதிகாரி என்பது மறுக்க முடியாத உண்மை.

எனவே, தமிழ் மக்களின் ஓர் சாதாரண உரிமைக்குக் கூடத் தடை விதித்து குழப்பம் செய்ய முயலும் இராணுவம் எப்படிச் சமாதான முயற்சிக்கு ஒத்துழைப்பு வழங்கும் என்பது கேள்விக்குரியதாகும்.

ஆக, இராணுவத்தினரின் இத்தகைய நடவடிக்கைகள் சிங்கள இராணுவத்தின் கொடூரத்தைத் தமிழ் மக்களிடம் மீண்டும் ஞாபகப்படுத்துவதாக இருக்குமே தவிர, அது சமாதானத்திற்கான வழியாக இருக்க முடியாதென்பதை இனிமேலாவது இராணுவம் புரிந்துகொள்ள வேண்டும்.

# நீதி நேர்மையோடு செயற்படும் போது ஆன்மீக வாழ்விலும் அர்த்தம் உண்டாகும்



இவ்வுலகில் வாழும் ஒவ்வொருவருக்கும் வாழ்வு ஒரு சவாலாகவே அமைந்துள்ளது. அந்தச் சவால்கள் மத்தியிலே அவற்றை எதிர்கொள்பவர்களே சுபீட்சமான எதிர்காலத்தைக் காண்கிறார்கள். ஏனையோர் வந்து பிறந்துவிட்டோம் வாழத் தெரியவில்லை என்பது போல் காலத்தை ஓட்டிச் செல்கின்றார்கள். நம்பிக்கையோடு செயற்பாடுகளை முன்னெடுப்பதால்பல சாதனைகளை படைக்கின்றவர்களாக மாறலாம்.

பெற்றுக்கொண்ட அழைப்புக்கேற்ற வாழ்வு வாழும்போதே நம்பிக்கை வாழ்வில் பொருள் உள்ளதாகின்றது. நிறைவான தாழ்ச்சியும், சாந்தமும், பொறுமையும் உள்ளவர்களாக செயல்படும் போது பணிவாழ்வு மேலும் சிறப்படைகின்றது. அன்பினால் ஒருவரை ஒருவர் பொறுத்துக் கொள்வது இறைபணி வாழ்வை முன்னெடுத்து மென்மேலும் சாதகமான சூழ்நிலையை உருவாக்கின்றது. இப்படியான மன நிலையில் தேவ ஆவி அளிக்கும் ஒருமைப்பாட்டை சமாதானம் எனும் பிணைப்பால் காப்பாற்றும் போது ஒரு நம்பிக்கையின் கீற்றைக் கண்டு கொள்ளலாம் என்பதை புனித பவுலடியார் கூறிவைக்கிறார்.

## பரமபிதா காட்டிய பாதை

### ஒரே நம்பிக்கையின் குறிக்கோள்

மனித வாழ்வின் குறிக்கோளானது ஆளுக்கு ஆள் வேறுபட்டாலும் இறைவனை அடையும் வழியில் பொதுத்தன்மை உடையதாகவே காணப்படுகின்றது. இதனாலேயே நாம்பலராயினும் கிறிஸ்துவுக்குள் ஒரே ஞானஸ்நானம், ஒரே விசுவாசம் மூலம் திருச்சபை என்ற மறை உடலின் உறுப்புக்களாக இணைக்கப்படுகின்றோம். திருச்சபையின் தலையாக விளங்கும் கிறிஸ்வின் பரிசுத்தத்தில் நாமும் இணைக்கப்படுகின்றோம். எனவே மாற்றம் காணப்பட்ட எம் வாழ்வு வலுவிழந்துபழைய நிலைக்குத் தாழ்த்தப்படாமல் புனிதத்துவ வாழ்வில் நாளும் வளர்ந்திட ஒரே நம்பிக்கையுடன் செயற்பட முன் வரும் போது இறைவனுடைய ஆவியானவர் எம்மை வழி நடத்திச் செல்வார்.

### இயேசு அப்பங்களைப் பலுகச் செய்தது

இயேசுவின் பகிரங்கப் பணிவாழ்வின் காலத்திலே 'யூதர்களின் 'பாஸ்க்கா' திருவிழா நெருங்கிக் கொண்டிருந்த போது ஒரு நாள் இயேசு மலையின மேல் தம் சீடர்களோடு இருக்கையிலே பெருங்கூட்டமான மக்கள் அவர்களைச் சூழ்ந்து கொண்டார்கள். இயேசுவின் போதனையைக் கேட்கவே அவர்கள் அலை அலையாக வந்திருந்தனர். அவர்கள் திரும்பிச் செல்லாமல் அங்கே இருப்பதை அறிந்த யேசுவின் சீடர்கள் அவர்களுக்கு எப்படி உணவு கொடுப்பது என்று திண்டாடினர் குருவிடம் என்ன செய்யலாம் என்று யோசித்தார்கள். இவர்கள் படும் அங்கலாய்ப்பைக் கண்ட இயேசு அவர்களைப் பந்தி அமர்த்துமாறு கூறினார். அங்கே ஐந்து அப்பமும் இரண்டு மீன் துண்டுகளும் ஒரு பையன் வைத்திருந்தான். அதனை வாங்கிக் கொண்டுவந்து இயேசுவிடம் கொடுத்தார்கள். இயேசு இறைவனுக்கு நன்றிகூறி அவற்றைப் பகிர்ந்தளிக்கும்படி கூறினார். சீடரும் அவ்வாறே செய்தனர். பந்தியமர்ந்த ஆண்களே ஏறக்குறைய 5 ஆயிரம் பேர் மீதியானவற்றையும் கூடைகளில் சேர்த்துவைத்தார்கள். இதுவே இயேசு அப்பங்களை பலுகச் செய்து உணவளித்த புதுமை நிகழ்வாகும். இதன் பின்னர் கூட்டம இயேசுவைப் பின் தொடர்ந்து கொண்டே இருந்தது.

### ஆன்மீக வாழ்வுக்கு அர்த்தம்

நாங்கள் வேடிக்கை பார்ப்பதற்கும், வேண்டாதனவற்றைச் செய்வதற்கும் பெருங்கூட்டமாகக் கூடுகின்றோம் அதனாலே நாம் சாதிப்பது வெறும் பூச்சியமானதே. அங்கு இறைபற்று இருப்பதில்லை, பிறரன்புப் பண்புகளும் இருப்பதில்லை. வெறும் காட்சியும், களியாட்டமுமே வாழ்வாகிவிட முடியாது. அடிதடிகள் வாழ்வை வளர்த்துவிட முடியாதவை. இளமையும், உணர்வும் முடிவடைந்ததும எல்லாம் அடங்கி ஒடுங்கிவிடும். இளமையை இறைவனுக்கு உரியதாக்கி நீதி, நேர்மையோடு செயற்படும்போது ஆன்மீக வாழ்விலும் அர்த்தம் உண்டாகின்றது. பிறந்த

**செல்வமகள்**

பயனின் குறிக்கோளை நாங்கள் நிறைவாக்கிக் கொள்கின்றோம். இயேசுவின் புதுமைகள் மூலம் அவரே இறைமகனின் மீட்பர் என்பதை மக்கள் கண்டு கொண்டார்கள். எம்முடைய வாழ்வு அர்த்தமுள்ள, நம்பிக்கை நிறைந்த சமாதானம் என்னும் ஒருமைப்பாட்டைக் கட்டியெழுப்பும் வாழ்வாக மலர இறைவன் அருள் சுரப்பானாக.

# ஆலயச்சூழலில் பாலியல் சேஷ்டைகளில் ஈடுபடுவோர் புலிகளின் அரசியல் துறையிடம் ஒப்படைக்கப்படுவர்

## நல்லூர் கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி கோயில் வருடாந்த உற்சவ காலத்தில் ஆலயத்தின் புனிதத்திற்குப் பங்கம் விளைவிக்கும் வகையில் ஆலயச் சூழலில் பெண்களுடனான சேஷடைகள், பாலியல் சேஷ்டைகள், கலாசாரத்தை சீரழிக்கும் நடவடிக்கைகள் ஆகியவற்றில் ஈடுபடுவோர் விடுதலைப்புலிகளின் அரசியல் துறையினரிடம் ஒப்படைக்கப்படுவர்.

அவ்வாறானவர்கள் மீது உடனடியாகவே உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

எதிர்வரும் 3ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நல்லூர் கந்தசுவாமி கோவில் உற்சவகால ஏற்பாடுகள் தொடர்பிலான கலந்துரையாடல் ஒன்று கடந்த வெள்ளியன்று யாழ். மாநகரசபையில் இடம் பெற்றது.

இதில் கலந்து கொண்டு கருந்துரையாற்றும் போது நல்லூர் கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் ஈஸ்வரன் மேற்கண்ட அறிவிப்பை வெளியிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்தும் கூறுகையில்,

இம்முறை நல்லூர் ஆலய உற்சவ காலத்தில் வீண் வம்பு புரிபவர்களை விடுதலைப்புலிகளின் அரசியல் துறையினர் கண்காணிக்கவுள்ளனர்.

இருப்பினும்,பாதுகாப்புத் தொண்டர்கள் மற்றும் பொலிஸார் மாநகர சபை ஊழியர்கள் ஆகியோரும் இங்கு பாதுகாப்புக் கடமையிலும் வீதிக்கண்காணிப்பிலும் 24மணி நேரமும் ஈடுபடுவர்.

அமைதிக்கும் பக்திச் சூழலுக்கும் பங்கத்தை ஏற்படுத்தும் செயற்பாடுகளைத் தவிர்க்கும் முகமாகவே இம்முறை இறுக்கமான பாதுகாப்பு நடைமுறைகள் அமுல்படுத்தப்படவுள்ளன.

கொள்ளை, களவு, சண்டை மற்றும் சச்சரவுகளில் பாதுகாப்புத் தொண்டர்கள், மாநகரசபையினர் ஆகியோர் உடனடியாகத் தலையிட்டு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வர்.

வீண் பிரச்சினைகளில் ஈடுபடுவோர் மடக்கிப் பிடிப்பதற்கேற்ற வகையில் அரசியல் துறையினரால் தொண்டர்களுக்கு விசேட பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் சாதாரண உடையில் கடமையிலீடுபடுவர் என்றார். (உ)

# கூட்டமைப்பு — புலிகள் சந்திப்பு ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குமிடையே நாளை திங்கட்கிழமை இடம்பெறவிருந்த சந்திப்பு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தினால் கடந்த 17ஆம் திகதி அனுப்பிவைக்கப்பட்ட இடைக்கால நிர்வாக சபைதிட்ட வரைபு யோசனைகள் குறித்து ஆராய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு விடுதலைப் புலிகள் அழைப்பு விடுத்திருந்ததும், இந்த வகையில் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வனுடன் நாளைய தினம் சந்திப்பு இடம்பெற இருப்பதாக முன்னர் செய்திகள் வெளியாகியிருந்தமையும் தெரிந்ததே.

(உ-10)

# இடைக்கால நிர்வாகத்தை எதிர்த்து நாடு முழுவதும் ஆர்ப்பாட்டங்கள்

## தேசிய பிக்குகள் முன்னணி ஏற்பாடு

(கொழும்பு)

அரசாங்கத்தினால் - முன்வைக்கப்பட்டுள்ள வடக்கு - கிழக்கு மாகாணத்திற்கான இடைக்கால நிர்வாக அமைப்பை எதிர்த்து தேசிய பிக்குகள் முன்னணி நாடு தழுவிய ரீதியில் ஆர்ப்பாட்டமொன்றை நடத்தவுள்ளது.

நாடுதழுவிய ரீதியில் சுமார் ஆயிரத்து 500பௌத்த விகாரைகளுக்கு முன்னால் இந்த ஆர்ப்பாட்டங்களை நடத்த தேசிய பிக்கு முன்னணி தீர்மானித்துள்ளது.

இதேவேளை, சமாதான முயற்சியில் ஈடுபட்டுள்ள போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு, மற்றும் நோர்வேப் பிரதிநிதிகளை உடனடியாக வெளியேற்றுமாறு கோரி கொழும்பில உள்ள நோர்வேத்தூதரகத்தின் முன்னால் பலதடவைகள் ஆர்ப்பாட்டங்களை நடத்தி வந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-10)

# இந்திய - இலங்கை மீனவர் பிரச்சினையை தீர்க்க இணக்கம்

(கொழும்பு)

கடற்பிரதேசங்களில் இந்திய - இலங்கை மீனவர்களுக்கிடையே ஏற்படும் பிரச்சினைகளை மனிதாபிமான அடிப்படையில் தீர்த்துக்கொள்ள இருநாட்டு வெளிநாட்டு அமைச்சர்களும் இணங்கியுள்ளனர்.

புதுடில்லியில் இருநாட்டு வெளியுறவு அமைச்சர்களுக்கும் இடையே நடைபெற்ற சந்திப்பின் போது இவ் இணக்கப்பாடு காணப்பட்டுள்ளது.

இச் சந்திப்பின்போது, தமிழ் நாட்டு அகதி முகாம்களில் தஞ்சமடைந்துள்ள இலங்கை அகதிகள் குறித்தும், அவர்களை நாட்டுக்குத் திருப்பி அனுப்புவது குறித்தும் ஆராயப்பட்டது.

இலங்கை - இந்திய கூட்டுப் பொருளாதார அபிவிருத்தி குறித்து ஆராய இந்திய வெளியுறவு அமைச்சர் ஜஸ்வத்சிங்க அடுத்தமாத நடுப் பகுதியில் இலங்கைக்கு விஜயம் செய்வது குறித்தும் தீர்மானிக்கப்பட்டது.

இலங்கை கடற்பிரதேசங்களில் இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் அதிகரித்து வருவதைத் தொடர்ந்து, இலங்கை மீனவர்கள் பெரும் பாதிப்புக்கு உள்ளாகி வருவதும் தெரிந்ததே. (தி)

## தினசரி தியானம்

### உன்னத நிலை

நல்லோர் அழிவதில்லை. யோகத்தைச் செய்யாமல் மனித வாழ்க்கை எனும் புயலைக் கடக்கிறவர்கூட முதலில் ஒழுக்க சீலர் வாழும் பகுதியில் பிறந்து பல ஆண்டுகள் வாழ்ந்து சமயப்பணியில் ஈடுபட்டு வாழ்க்கையில் வெற்றிகாணும் யோகியின் குடும்பத்தில் மறுபடி பிறந்து, முற்பிறவிகளில் பெற்ற அறிவை மீண்டும் பெற்று முழுமையடைவதற்காக முயற்சிக்கிறார். பல பிறவிகள் எடுத்து முழுமைகாணும் அவர் ஒரு நாள் மகோன்னதமான பேரின்பத்திற்குரிய உன்னத நிலையை அடைகிறார்.

சுவாமி சிவானந்தர்

# கிளிநொச்சியில் கடத்தப்பட்ட இரு மாணவிகள் தப்பிவந்தனர்

## உரும்பிராயில் உள்ள உறவினர் வீட்டில் தஞ்சம்

(உரும்பிராய்)

கிளிநொச்சி கணேசபுரத்தில் வைத்து வெள்ளை வானில் வந்த இனந்தெரியாத நபரினால் கடத்தப்பட்ட இரு பெண் பிள்ளைகள் அவரின் பிடியில் இருந்து தப்பித்து உரும்பிராய் கிழக்குப் பகுதியில் உள்ள உறவினர் வீட்டுக்கு வந்து சேர்ந்த பரபரப்பான சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் கிளிநொச்சி சென். திரேசா பெண்கள் பாடசாலையில் தரம் 9 இல் கல்வி பயிலும் மாணவிகளான ஜெயராசா வானதி (வயது 13), சுப்பிரமணியம் ஜெயசித்திரா (வயது 13) ஆகிய இருவருமே கடத்தப்பட்டு பின்னர் தப்பித்து வந்தவர்களாவர்.





சம்பவம் பற்றி மாணவர்கள் இருவரும் விபரிக்கையில்,

பரந்தனைச் சொந்தஇடமாகக் கொண்ட தாம் இருவரும் நேற்று, காலை கணேசபுரத்தில் உள்ள தனியார் கல்வி நிறுவனத்திற்குச் சென்று விட்டு, அங்கிருந்து வீட்டுக்குத் திரும்பிக்கொண்டிருக்கையில், வீதியால் வந்துகொண்டிருந்த வெள்ளை வானின் சாரதி, தம்மோடு எங்கே சென்று வருகின்றீர்கள் என்று கேட்டு உரையாடியதாகவும், சிறிது நேரத்தில் தாம் இருவரும் மயக்கம் போட்டு நிலத்தில் வீழ்ந்ததாகவும் தெரிவித்தனர்.

பின்னர் மயக்கம் தெளிவடைந்த போது, ஓடிக்கொண்டிருக்கும் வானில் இருப்பதை உணர்ந்து கொண்டோம். வானில் சாரதி மட்டுமே இருந்தார். நாம் மயக்கம் போன்றே கிடந்தோம்.

திடீரென வான் ஆனையிறவுக்கும் பளைக்கும் இடைப்பட்ட ஓர் இடத்தில் நின்றது. சாரதி வானின் கதவுகளைப் பூட்டிவிட்டு திறப்பைச் சாரதி ஆசனத்துக்குக் கீழே வைத்துவிட்டு எங்கோ செல்வதை அவதானித்த நாம் திறப்பை எடுப்பதற்காக சீற்றைத் தூக்கியபோது, அதில் 1000 ரூபா காசும் திறப்பும் இருந்தது.

காசையும் திறப்பையும் எடுத்துக் கொண்டு கதவைத் திறந்து வெளியே ஓடிவந்து முகமாலை நோக்கி வந்து கொண்டிருந்த பஸ்ஸில் ஏறி முகமாலைக்கு வந்து, பின்னர் அங்கிருந்து யாழ்ப்பாணம் வந்து உறவினர் ஒருவரின் உதவியுடன் உரும்பிராய் கிழக்கிலுள்ள எமது உறவினர் வீட்டுக்கு வந்து சேர்ந்ததாக தமது திகில அனுபவத்தைத் தெரிவித்தனர்.

இச் சம்பவம் குறித்து விடுதலைப் புலிகளின் வலி.கிழக்குக் கோட்ட அரசியல் துறையினரிடமும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (இ)

## சு. ப. தமிழ்ச்செல்வனுக்கு

# விஸா வழங்க பிரிட்டன் மறுப்பு

## கூட்டமைப்புடன் நாளை சந்திப்பு

(கிளிநொச்சி)

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு. ப. தமிழ்ச்செல்வன் இம்மாதக் கடைசியில் ஐரோப்பிய நாடு ஒன்றுக்கு பயணமாக உள்ளார். இந்த விஜயத்திற்கு முன்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை நாளை காலை கிளிநொச்சியில் சந்தித்து கலந்தாலோசிக்க உள்ளதாகவும் தெரிய வருகின்றது. மேற்படி சந்திப்பு குறித்த அழைப்புக்கள் ஏற்கனவே தமிழ் தேசிய கூட்டமைப்பினருக்கு விடுதலைப் புலிகளால் அனுப்பி வைக்கப் பட்டுள்ளதை கூட்டமைப்பு முக்கியஸ்தர் ஒருவர் உறுதிப்படுத்தினார். இச்சந்திப்பின் போது வடக்குக் கிழக்குக்கான இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு குறித்து கூட்டமைப்பு பிரதிநிதிகளின் ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்வதும் இது குறித்த கலந்துரையாடலை நடத்துவதும் நோக்கமாக இருக்கும் என கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இலங்கை அரசினால் முன் வைகக்பட்டுள்ள இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு குறித்து கலந்து ஆலோசிப்பதற்கென விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப பொறுப்பாளர் இலண்டன் பயணமாக இருந்த போதும் பிரிட்டிஷ் தூதரகம் விஸா வழங்க மறுத்ததையடுதது அவர் தற்போது சுவிற்சர்லாந்துக்குச் சென்று அங்கு விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகா அன்ரன் பாலசிங்கத்தை சந்தித்துப் பேச உள்ளார் என்று நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (ந)

# வீரமுரசு கலையரங்கம் இன்றுமுதல் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

''வீரமுரசு கலை அரங்கம்'' என்ற நிகழ்வு இன்று முதல் யாழ்மாவட்டத்தில் பிரதேசரீதியாக ஆரம்பமாகவுள்ளது.

இன்று ஆரம்பமாகும் முதலாவது கலையரங்கம் புத்தூர் மேற்கு கலைமதி சனசமூக நிலையத்தின் முன்றலில் மாலை 7.00மணிக்கு நடைபெறும்.

இந் நிகழ்வில் தமிழீழத்தின் மறுமலர்ச்சிக் கலைஞர்கள் வழங்கும் புதுவை அன்பனின் ''நாமாக்க குடியல்லோ''என்ற நாடகமும் தமிழின செழிப்பை அழிப்பதில் பெரிதும் விஞ்சி நிற்பது பொதுஜன ஐக்கிய முன்னணியா? ஐக்கிய தேசிய கட்சியா?என்ற தலைப்பில் பட்டிமன்றமும் நடன நிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளன. (ந-3)

## திரைப்படக் காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக் கழக புறநிலை படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் இடம் பெற்று வரும் திரைப்படக் காட்சி தொடரில இன்று காலை 10.00மணிக்கு புவியியல் துறை மண்டபத்தில் ''இரும்பு திரை'' என்ற திரைப்படம் காண்பிக்கப்படவுள்ளது.



## பத்திரிகை விநியோகஸ்தர்கள் தேவை

சொந்தமாக, நல்ல நிலையில் மோட்டார் சைக்கிள் வைத்திருப்பவர்கள் இன்று (27.07.2003) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு வலம்புரி அலுவலகத்திற்கு நேரில் வரவும்.

குறிப்பு: வலம்புரி அலுவலகத்தில் இருந்து 5கிலோமீற்றர் தூரத்திற்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

வலம்புரி ஆளணி முகாமையாளர்.



கைதடி சித்தமருத்துவ மாணவர்கள் நேற்று யாழ். பல்கலைக் கழக நிர்வாக மையப் பகுதியமைந்த கட்டடத் தொகுதியின் நுழைவாயிற் கதவுகளைப் பூட்டிவைத்திருப்பதை படங்களில் காணலாம். (பூட்டப்பட்ட கட்டடப்பகுதியில் பல்கலைக் கழக பேரவைக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.) *(படம்: வளவன்)*

## சித்த மருத்துவ...

கொண்டனர்.

இப்பேரவை உறுப்பினர்களே மாணவர்களால் பூட்டிவைக்கப்பட்டனர்.

கடந்த 18 நாட்களாக கைதடியிலுள்ள சித்தமருத்துவத்துறைப் பிரிவில் இடம்பெற்ற மாணவர்களின் எதிர்ப்புப் போராட்டம், நேற்று பல்கலைக் கழகத்தின் மையப் பகுதிக்கு விஸ்தரிக்கப்பட்டது.

யாழ். பல்கலைக் கழக சித்த மருத்துவத்துறையை தனிப்பீடமாக அனுமதிக்கக் கோரியும், அதனை நிறுவன மயப்படுத்துவதை எதிர்த்துமே மாணவர்களால் இப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இதேவேளை, மாணவர்களின் கோரிக்கையைப் பல்கலைக் கழகப் பேரவையினர் ஏற்றுக் கொண்டதை அடுததே, பேரவைக் கேட்போர் கூடக் கதவுகள் திறக்கப்பட்டு பேரவை உறுப்பினர்கள் வெளியே செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

பேரவையினர் ஏற்றுக்கொண்ட விடயத்தை எழுத்துமூலம் தரும் வரை போராட்டம் தொடரும் என்றும் மாணவர்கள் தரப்பில் தெரிவிக்கப் பட்டது. (இ-4)

## இடைக்கால சபைத்...

நிதியையும் உள்ளடக்குவதென்று அரசாங்கம் முன்வைத்த யோசனையையும் அவர் நிராகரித்தார். இது பற்றி ஜனாதிபதியுடனும், அவர் தலைமையிலான கட்சியுடனும் கலந்தாலோசிக்கப்பட்டிருக்கவில்லை என்று அவர் குற்றஞ்சாட்டினார்.

என்றாவது ஒருநாள் காலை விழித்தெழுந்து பத்திரிகைகளைப் பார்க்கும் பொழுதுதான் நாம் இடைக கால நிர்வாகசபையில் சென்று அமர்ந்திருக்கவேண்டும் என்று தெரிய வரும். இந்த அணுகுமுறை முற்றிலும் தவறானது. அரசாங்கம் பண்பு குறைவாக நடந்துகொள்கிறது.

இதேவேளை, பொ.ஐ.முன்னணி ஆட்சிக்கு வருமாயின் அதனுடன் சமாதானம் பற்றிப் பேசவேண்டியிருக்குமாயின் அதற்காக அந்த அரசு, புலிகள் மீது மேற்கு நாடுகள் விதுத்துள்ள தடையை நீக்குவித்தல் வேண்டுமெனப் புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் கருத்துக் கூறியிருந்தார்.

இக்கருத்துக் கேலிக்குரியது அதனை நான் நகைச்சுவையாக ரசிக்கிறேன். நான் ஆட்சிப் பீடத்திற்கு வரும் பட்சத்தில் புலிகளுடன் பேசததான் வேண்டும். ஆனால், அரசியல ரீதியாக மட்டுமே பேச்சுக்களை வைத்துக்கொள்ள முடியும்.

தென்னிலங்கையின் இரு பிரதான கட்சிகள் மீதும் இனப்பிரச்சினைத் தீர்விற்கான பொறுப்புக்களைப் புலிகள் இலகுவாகச் சுமத்தி விடுகின்றனர்.

அதேவேளை, இவ்விதமான தீர்வொன்றை ஏற்றுக்கொள்வேன் என்று புலிகளின் தலைவர் பிரபாகரன் குறிப்பட்டுக் காட்டுவதாகவும் இல்லை. புலிகள் தமது பிரேரணைகளைச் சமர்ப்பிக்கும் ஒரு நாளில் மட்டுமே இரு பிரதான கட்சிகளும் ஒன்றாக இணைந்து அதனை ஆராய முடியும்.

பிரபாகரன் கூறுவது என்னவென்றால், நான் உங்களுக்கு ஒன்றும் சொல்லமாட்டேன். பிரேரணைகள் ஏதாவது இருந்தால் அவற்றை நீங்கள் சமர்ப்பியுங்கள். என்னிடம் உதவி ஒன்றும் கேட்கவேண்டாம் என்பதாகும். அரசாங்கம் பிரேரணைகளை முன் வைக்கும்போது அவற்றைத் தான் நிராகரிக்கவேண்டும் என்று பிரபாகரன் விரும்புகின்றார். தனக்கு இன்னதுதான் வேண்டுமென்று அவர் குறிப்பிட்டுக்கேட்பாராயின் தென்னிலங்கையின் கட்சிகள் ஒன்றுகூடி ஒரு தீர்வுக்கு வரும் சாத்தியங்கள் அதிகமுள்ளன என்றும் கூறினார். (த)

## வடக்கு...

வேண்டும். இதற்குப் பெரும்பான்மைச் சமூகம் இரு தரப்பினருக்கும் அழுத்தம் கொடுக்கவேண்டிய காலம் வந்துள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாண இடைக் கால நிர்வாகசபை தொடர்பாக விடுதலைப் புலிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள யோசனைகளில் பொது ஜன ஐக்கிய முன்னணியின் பிரதிநிதித்துவம் உறுதிசெய்யப்பட்டிருப்பதால் இனப்பிரச்சினைத் தீர்வில் ஜனாதிபதியின் பங்களிப்பு அவசியம் என்பது உறுதிசெய்யப்பட்டுள்ளது.

இந்நிலையிலேயே, முஸ்லிம் மக்களின் பிரச்சினைகள், தேவைகள் தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்கு உணர்த்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. இதனாலேயே, ஜனாதிபதியை முஸ்லிம் காங்கிரஸ் சந்திக்கவுள்ளது என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## இளநிலை...

இளநிலை அதிகாரிகள் பயிற்சியில்,சிறப்புப் பெறுபேறு பெற்றவர்களுக்கு பரிசில்களும், தேர்ச்சி பெற்றவர்களுக்கு சான்றிதழ்களையும் பிரபாகரன் வழங்கிக் கௌரவித்தார்.

இந் நிகழ்வின் இறுதியில் இளநிலை அதிகாரிகளின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (வ)


## MEDICAL CHECK UP
## வைத்திய பரிசோதனை

நோய் வருமுன் காப்போம்
திடீர் மரணத்தைத் தவிர்ப்போம்

- 40 வயதிற்கு மேற்பட்ட நோய் உள்ள, நோய் அற்ற அனைவரும் இந்த MEDICAL CHECK UP ஐச் செய்வதன் மூலம் நோயற்ற சுகவாழ்வு வாழலாம்
- X-RAY- ECG, சில முக்கிய இரத்தப் பரிசோதனைகள் சிறுநீர்ப் பரிசோதனை.

இலவச வைத்திய ஆலோசனையுடன் கூடிய MEDICAL CHECK UP குறைந்த கட்டணத்தில்! விபரங்களுக்கு நேரில்!

போக்குவரத்து வசதி கருதி

**சம்பந்தர் மொடேர்ன் கிளினிக்**

(அமுல் கிறீம் ஹவுஸ் அருகில்)
ஆஸ்பததிரி வீதி, யாழப்பாணம்.


இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.07.2003 இல் அச்சிட்டு, வெளியிடப்பட்டது.